மன்றம்

வார ஏடு

ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

[ம]லர் 6—இதழ் 23 ★ 6-10-57 சென்னை ★ விலை 16 காசு

அகில இந்திய ரேடியோவா ? அகில இந்தி ரேடியோவா ?

——(0)——

இந்தியைப் பரப்ப டில்லியின் சதித் திட்டங்கள் !

——(0)——

வானெலியில் நடைபெறும் சூழ்ச்சி !

——(0)——

இந்திய துணைக்கண்டம் முழுவதும் இந்[தி]யைப் பரப்பிட டில்லி ஆதிக்கக்காரர்கள் [தி]ட்டமிடுகிருர்கள் !

இந்திய துணைக்கண்டம் முழுவதையும் [அ]டிப்படைக்க ஒரு அரசியல் ஏகாதிபத்[தி]யம் டில்லியில் உருவாகிவிட்டது! அடுத்த[த]ாக இந்தியா முழுவதையும் அடக்கி[ய]ள ஒரு மொழி ஏகாதிபத்தியம் உருவாக்[கப்]படுகிறது !

இந்திய நாடு என்பதை இந்தியின் நாடு[க]ஆக்க அவர்கள் பார்க்கிருர்கள் !

அரசியல் மொழி என்பதன் பேரால் உத்[தர]ப் பிரதேசக்காரர்களும் பீகார் மாநிலத்[த]வர்களும் வழங்கும் இந்தி மொழியை, [அ]கில இந்தியாவுக்கும் ஏற்ற மொழியாக [ஆ]க்கப் பார்க்கிருர்கள் ! மற்ற மாநிலத்த[வர்]கள், மற்ற மொழி பேசுபவர்கள் இந்[தி]யை ஏற்றுக்கொள்வார்[களா], மாட்டார்களா என்ப[தை]ப்பற்றி டில்லி ஆட்சி[யாள]ர்கள் கவலைப்படவில்லை. [ம]ற்றவர்கள் ஏமாந்திருந்த [கா]லத்தில், மற்றவர்களின் கவனம் [வே]றுபக்கம் திரும்பியிருந்த காலத்தில், [அவ]ர்களாக எழுதிவைத்துக்கொண்ட ஒரு [அர]சியல் சட்டத்தைக் காட்டி, இந்தியா [முழு]வதற்கும் இந்தி என்ற கூச்சலைக் கிளப்[புகி]ருர்கள் !

[அ]ரசியல் சட்டத்தில் 'இந்தியா என்[கிற] பாரத்' என்ற குறிப்பு அடிக்கடி வரும். [ஆ]ஞல் நாங்கள் 'இந்தியா என்கிற பாரத், [பா]ரத் என்கிற உத்தரப் பிரதேசம்' என்று [சொ]ல்லுவது வழக்கம்'' என்று டி. டி. [கிரு]ஷ்ணமாச்சாரியார் ஒருதடவை கூறி[னா]ர். அதை அவர் வேடிக்கையாகக் [கூறி]ஞரோ, வேண்டுமென்றே கூறிஞரோ, [இந்]தியா பூராவையும் உத்தரப் பிரதேசம் [அட]க்கியாள முயல்கிறது என்று வெளிப்[படு]கிறது. அரசியல் சட்டம் இந்தியா [என்]ற பெயரை பாரத் என்று மாற்றியது.

இரா. செழியன்

ஆஞல் அரசியல் நடைமுறையில் உத்தரப் பிரதேசக்காரர்களின் பேச்சும் மொழியும் வலுப்பெற்று விளங்குகிறது. அதஞல் தான் அரசாங்க மொழியாக இந்தியைக் கொண்டுவருவதில் அவ்வளவு அக்கரை காட்டப்பட்டு வருகிறது.

இந்தியைப் பரப்பிட டில்லி ஆதிபத்தியம் துடிதுடிப்புடன்தான் இருக்கிறது. அதற்காக எவ்வளவு கோடி ரூபாய்களை வேண்டுமாஞலும் செலவிட அது தயாராக இருக்கிறது. ஆஞல் பணம் கொடுத்தாலும் வாங்குவதற்கு மாநிலங்கள் தயங்குகின்றன. மற்ற துறைகளில் பணம் என்ருல் எங்கே என்று அலறியடித்துப் போய் நிற்கும் தென்னுட்டு மாநிலங்கள், இந்திக்குப் பணம் என்ருல் வாயடைத்து நிற்கிருர்கள், கண் கலங்கப் பார்க்கிருர்கள்.

அதிகார உச்சியில் ஆணவப் பார்வையுடன் வீற்றிருந்தபோதிலும், தென்னுட்டு மாநிலங்களில் இந்தியைப் பரப்புவது சுலபமானதல்ல என்பது டில்லி ஆட்சியினருக்குத் தெரிந்துவிட்டது. அதஞல் அவர்களுடைய வேகம்—இந்தியைப் பரப்புகின்ற முறை மாறிவிட்டது.

அரசாங்க மொழி என்பது அரச வீதியில் பீடு நடை போட்டுத் தென்னுட்டை நோக்கி வரவில்லை. அந்தி மயங்கும் வேளையில், முகத்தை மூடிக்கொண்டு, குரலை மாற்றிக் கொண்டு, திருடவரும் கள்ளனைப்போல மெதுவாக, மறைந்து மறைந்து வருகிறது ! சந்து பொந்துகளில் புகுந்து புகுந்து அது வருகிறது ! வெளிச்சம் பட்டால் மறைகிறது, இருட்டைக் கண்டால் கிளம்பி வருகிறது !

மற்றவர்கள் ஏமாந்திருக்கும்பொழுது அவர்களது உடைமைகளைக் களவாடவரும் திருடனைப்போல, நம்மையெல்லாம் ஏமாற்றும் விதத்தில் நமது உடைமைகளை, உரி

அறப்போருக்குத் தயாராகுங்கள் !

"ஒருமொழி இந்த நாட்டுக்குள் வருகிறதென்ருல் எல்லாவிதமான எச்சரிக்கைகளையும் எடுத்தாகவேண்டும். அது எந்த நாட்டுக்குள்ளே வருகிறது ? எந்த நாட்டிலேயிருந்து வருகிறது ? எந்த நேரத்திலே வருகிறது ? என்ன சொல்லிக்கொண்டு வருகிறது ? இவைகள் நமக்கு விளக்கப்படவேண்டும். இவைகள் விளக்கப்படுவதற்கு நாட்டை ஆளுகின்ற காங்கிரஸ் அமைச்சர்கள் இன்றையத் தினம் சொல்லுகின்ற பதிலெல்லாம் 'இந்தியா ஒன்ருக இருக்க வேண்டும் ! இந்தியாவை ஒன்றுபடுத்த ஒருமொழி வேண்டாமா !' என்று சொல்கிருர்கள்,

நாம் அடிப்படையையே சந்தேகிக்கின்ருேம். 'நீ போடுகிற வீசைக் குண்டிலே 40 பலம் இல்லை!' என்று சொல்லியான பிறகு 2 குண்டு போட்டு '80 பலம்' என்று வாதாடி என்ன பயன்? நான் 'நீ போடுகிற குண்டில் 40 பலம் இல்லை. அது தேய்ந்து போய் 22 பலம் தான் இருக்கிறது' என்கிறேன். 'இதற்கு வீசைக்குண்டு என்று பெயர்! ஆகையிஞல் ஒரு வீசை தான் இருக்கும்' என்று என்னிடத்தில் வாதாடிஞல் என்ன பலன் ? அதைப்போல இந்தியா ஒரு நாடல்ல என்று நாங்கள் வாதாடுகிருேம். இந்தியா ஒரு நாடாக இருக்கத் தேவையில்லை என்பதற்கு ஆதாரம் காட்டுகிருேம். இவைகளை மறுத்துப்பேசுவதற்கு முடியாமலும், பிரச்சினையைத் தீர்க்காமலும், இந்தப் பிரச்சினை அப்படியே விவாதத்தில் இருக்கிற பொழுது எதற்காக இந்தியைப் புகுத்துவது ?

* * *

இந்தி மொழியினுடைய ஆதிக்கத்தைத் தடுத்துத் தீரவேண்டுமென்ருல், எடுக்கக்கூடிய அறப்போராட்டம் எந்த அளவுக்கெல்லாம் செல்லக் கூடுமென்பதை நாட்டிலே இன்றையத்தினம் நடைபெறுகின்ற நாஞவிதமான காரியங்களைப் பார்த்தால் தெரியும்.

வெள்ளைக்காரன் காலத்தில் 'மிரட்டுவதற்காகச் சுடு 'என்ற உத்தரவு. மேலே சுட்டால் வெற்றுத் தோட்டா வெடிக்கும், மக்கள் மிரண்டோடுவார்கள் ! இவர்கள் காலத்தில் 'கொல்வதற்காகச் சுடு' என்பது தான் உத்தரவு ! அப்படிப்பட்ட ஈவு இரக்கமற்ற நிலைமை நாட்டிலே இருக்கிற காரணத்தால், இந்தி எதிர்ப்பு இயக்கத்தைத் திறம்பட நடத்துகின்ற அறப்போராட்டம் உருவாகின்ற நேரத்தில், நீங்கள் எதற்கும் தயாராக இருக்கக் கூடிய நல்ல உள்ளத்தைத் தாங்கி, ஒரு துளியும் கண்ணியத்தைக் கெடுத்துக் கொள்ளாமல், கட்டுப்பாட்டை மீருமல் இந்தப் போராட்டத்திலே ஈடுபட முடியும் என்ற துணிவு இருக்கிறவர்கள் தங்கள் பெயர்களை அறப் போர்ப்பட்டியலில் சேர்க்கும்படி கொடுங்கள் !

பட்டியல் வளரட்டும் ! இந்தப் பட்டியல் வளர்ந்தால், எவ்வளவு தான் வீரதீரமாக அவர்கள் பேசிஞலும் கீழே இறங்கி வரத்தான் செய்வார்கள்,''

—திருவண்ணமலை இந்தி எதிர்ப்பு மாநாட்டில்,

அறிஞர் அண்ணு.

"விவித பாரதி" தென்னாட்டின் வேதனைப் பகுதி!

மைகளை, பன்னெடுங்காலமாக நாம் காப்பாற்றிவரும் ஒரே செல்வமாகிய மொழியைப் பறித்திட இந்தி வருகிறது!

வெளிப்படையாகச் செய்தால் எதிர்ப்பு வரும் என்று மறைமுகமாக – கள்ளத்தனமாகச்செய்ய முயல்கிறார்கள்! நேர்மையில் முடியாததை, சூழ்ச்சியால் நிறைவேற்றப் பார்க்கிறார்கள்!

தெருப்பக்கமாக வந்தால் தடியடி கிடைக்கும் என்று தெரிந்தால், கொல்லைப்பக்கமாக வர இந்தி முயல்கிறது. கொல்லைப்பக்கத்தில் வேட்டை நாய் உலவுகிறதென்றால், சன்னல் வழியாக உள்ளே நுழையப் பார்க்கும். இந்த நாட்டிலுள்ள சன்னல்கள் தென்றலுக்குத்தான் திறக்கும் வாடைக்காற்றுக்குத் திறக்காது என்றால்; கூரைமேல் ஏறி வீட்டிற்குள் இறங்கிவிட முயற்சிக்கிறது?

உண்மையில் இந்தியைக் கட்டாயப்படுத்த நினைத்த டில்லி ஆட்சியாளர்கள், வீடுகளின் மேல் நீண்டிருக்கும் கம்பங்களிலிருந்து கீழிறங்கும் கம்பிகளின் வழியாக–அதாவது ரேடியோ வழியாக இந்தியை நாடெங்கும் பரப்பத் திட்டமிட்டுள்ளார்கள்!

பள்ளிக்கூடங்களின்மூலமாக இந்தியைக் கட்டாயப்படுத்த டில்லி ஆட்சியாளர்களுக்குத் துணிவில்லை!

சட்டசபைகளின் மூலமாக இந்தியைக் கட்டாயப்படுத்த அவர்களுக்கு நெஞ்சுரமில்லை!

தேர்தலின் மூலமாக, மக்களின் வாக்குகள் மூலமாக இந்தியைக்கட்டாயப்படுத்த அவர்களுக்குப் பயமாக இருக்கிறது!

மாநில அமைப்புகளின்மூலம் இந்தியைப் பரப்ப முடியாத நிலையில், தங்களுடைய ஆதிக்கத்தில் இருக்கும் அமைப்புகளின் மூலம் இந்தியைப் பரப்ப, டில்லி அதிகார வர்க்கம் பாடுபடுகிறது! இந்தி வெறியர்களுக்குப் பணியவேண்டியிருக்கிறது, இந்தியல்லாத மற்ற மொழியினரைக் கண்டால் பயமாகவும் இருக்கிறது! அதிலும் தென்னாட்டு மாநிலத்தினர் சொந்தமுயற்சியில் இந்தியைப் பரப்பமாட்டார்கள் என்ற எண்ணம் வலுப்பெற்றுவிட்டதால், தனது ஆதிககத்தின் கீழிருக்கும் அமைப்புகள்மூலம் இந்தியைப் பரப்பவேண்டும் என்று டில்லி ஆட்சிபீடம் கருதுகிறது.

இந்தியைத் தென்னாட்டின் மீது சுமத்திவிடுவது என்ற கட்டுப்பாடான முயற்சியில், அகில இந்திய ரேடியோ அமைப்பின்மூலம் அண்மையில் ஒரு பெரிய முயற்சி—பெரியதொரு சதித்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது!

இந்த மாதம் 3ந் தேதியிலிருந்து "விவித பாரதி" என்ற தலைப்பின்கீழ் சென்னையிலிருந்து புதுவகையான ரேடியோ நிகழ்ச்சிகளை ஒலிபரப்ப அகில இந்தியரேடியோ ஏற்பாடு செய்துள்ளது. இதேபோன்ற நிகழ்ச்சிகள் பம்பாயிலிருந்தும் அதே நேரங்களில் ஒலிபரப்பப் படுமாம்.

புதுவகையான இந்த நிகழ்ச்சிகளைப்பற்றிக் கூறுமுன், இந்தப் புது முயற்சி உண்டான வரலாற்றைப்பற்றிச் சிறிது தெரிந்துகொள்ளவேண்டும்!

இந்தியாவில் பல பகுதிகளில் ரேடியோ வைத்திருப்பவர்களும், பெரும்பாலாக சிலோன் ரேடியோவே கேட்கிறார்கள். ரேடியோ பெட்டி என்று இருந்தால், சதா சர்வ காலம் சிலோன் ரேடியோவே கேட்கப்பட்டது. சிலோன் ரேடியோவின் தாரதம்மியத்தைப் பற்றி இங்கு ஆராயத் தேவை

அக்டோபர் 13
இந்தி எதிர்ப்பு நாள்!

தென்னாட்டின்மீது

இந்தி ஏகாதிபத்தியம்
படையெடுத்துவருகிறது!

நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்?

அரசாங்கத்தில் இந்தி!

ரேடியோவில் இந்தி!

செய்திப்படத்தில் இந்தி!

தந்தி – தபாலில் இந்தி!

இரயில்வேயில் இந்தி!

வாணிபத்தில் இந்தி!

உங்கள் திருநாட்டைச் சுடுகாடாக்கும்
செந்தி வருகிறது!

உங்கள் வளநாட்டை அடிமைக்காடாக்கும்
இந்தி வருகிறது!

விரட்டுங்கள், விரட்டுங்கள்,
விரட்டியடியுங்கள்!

அக்டோபர் 13–இல்

ஊர்வலங்கள் நடத்துக!
எதிர்ப்பொலி கிளப்புக!
தமிழர்கள் காட்டும் எதிர்ப்பை
தரணி அறியச் செய்க!

இல்லை. அதன் நோக்கமு போக்கும் எப்படியிருந்தாலும் இந்தியாவிலிருப்பவர்கள் அகில இந்திய ரேடியோ நிலையங்களை விட சிலோன் ரேடியோ நிலைய நிகழ்ச்சிகளை தான் அதிகமாகக் கேட்டு வந்தார்கள் என்பதை யாரும் மறுக்கமுடியாது. இசைத் தட்டுகளையும், திரைப்பட பதிவுகளையும் இந்திய ரேடியோ குறைத்துக்கொண்டது. இலங்கை வானொலி, முழு நேரத்தையும் திரைப்பட இசைக்காகச் செலவிட்டது. எவ்வாறு பொது மக்கள் திரைப்பட இசையை விரும்பி இலங்கை வானொலியை கேட்டபடி இருந்தனர். எளிய இசை நிகழ்ச்சிகள், குறிப்பாக திரைப்பட இசை அகில இந்திய ரேடியோவில் ஒலிபரப்பப்படவேண்டும் எனப் பலர் கேட்டனர். அரசியலாரும் அதை உணர்ந்தனர். எளிய இசைப் பகுதிகளை இந்தியா முழுவதிலும் உள்ளவர்கள் கேட்கவேண்டுமென்பதற்காக, சக்தி வாய்ந்த இரு ஒலிபரப்பிகளை-சென்னையிலும் பம்பாயிலும்-நிறுவ அரசாங்கம் தீர்மானித்தது. இதையல்லாமல் மற்றொரு காரணமும் இருந்தது.

சென்னையில்உள்ள ரேடியோ நிலையம் சாதாரண அமைப்பாக உள்ளது. அதிலிருந்து ஒலிபரப்பப்படும் மின்னலைகள் அதிகப் பலம் வாய்ந்தவை அல்ல, சென்னையிலிருந்து நூறுமைல், இருநூறு மைல்களுக்குத் தெற்கில் போய்விட்டால் சாதாரண ரேடியோக்களைக்கொண்டு கேட்கமுடியாது. தெற்கே போகப்போக திருச்சி ரேடியோவோ, சிலோன் ரேடியோவோ கேட்கக்கூடிய அளவுக்கு சென்னை ரேடியோ கேட்காது. சென்னையிலிருக்கும் பல ரேடியோக்களில் திருச்சி நிகழ்ச்சிகளைத் தெளிவாகக் கேட்க முடியாததுபோல,திருச்சிக்கும் அதற்கும் தெற்கே இருப்பவர்களாலும் சென்னை ரேடியோ நிகழ்ச்சிகளைத் தெளிவாகக் கேட்க முடிவதில்லை. தமிழ்நாட்டிலேயே ஓரிடத்திலிருக்கும் ரேடியோவை மற்றொரிடத்தில் இருப்பவர்களால் தெளிவாகக் கேட்கமுடியாதபொழுது, வெளிநாட்டிலுள்ள தமிழர்களால் தமிழ்நாட்டு நிகழ்ச்சிகளைக் கேட்க முடியுமா? மலேயா, பர்மா, ஜாவா, இலங்கை, தென்னாப்பிரிக்கா போன்று பல வெளிநாடுகளில் உள்ள தமிழர்களால் சென்னை நிகழ்ச்சிகளைக் கேட்க முடிவதில்லை. அதற்குக் காரணம் சென்னையில் உள்ள ரேடியோ நிலையத்தில், பலமான மின் அலைகளை அனுப்பக்கூடிய வசதி இல்லை. சென்னையில் உள்ள ரேடியோ நிலையத்தின் ஒலிபரப்பும் வலிவை அதிகப் படுத்தவேண்டுமென ப

(12-ம் பக்கம் பார்க்க)

மன்றம்

ஞாயிறு 6—10—57 சென்னை

வரவு — செலவு

தமிழ் நாட்டின் வட வெல்லையோரத்தில், தமிழர்கள் பெரும்பான்மையினராக வாழும் திருத்தணியும் அதைச் சார்ந்த சில பகுதிகளும் தமிழ் நாட்டுடன் (காமராஜரின் அகராதிப்படி சென்னை இராஜ்யத்துடன்) சேர்க்கப்பட்டுள்ளது குறித்து மிக மகிழ்ச்சியடைகிறோம். மாநிலச் சீரமைப்புக்கு முன்பிருந்தே அங்கு வாழும் தமிழர்கள் தமிழ் நாட்டுடன் சேர்ந்து வாழவே பல வகையிலும் பாடுபட்டு தம் விருப்பத்தை தெரிவித்தபடி இருந்தனர். அதற்குத் தமிழ் நாட்டினரின் ஒரு மித்த ஆதரவும் இருந்தது. மொழிவழி மாநிலச் சீரமைப்பின் போது, அந்தப் பகுதிகள் 'தமிழ் நாட்டுடன் சேர்க்கப் பட்டிருக்கவேண்டும் ஆனல் அது ஒத்திப் போடப்பட்டுக் கடைசியாக, படாஸ்கர் தீர்ப்பில் அதற்கு முடிவுகாணப்பட்டுள்ளது. வீண் காலக் கேடு நேரிட்டபோதிலும், திருத்தணிப் பகுதிகள் தமிழ் நாட்டுடன் சேர்க்கப்பட்டது தமிழர்கள் அனைவருக்கும் மன மகிழ்ச்சி தருவதாகும். பிரிந்திருந்து இயல்பான தாய்மொழிப் பகுதியுடன் சேர வரும், திருத்தணியிலும் அதைச் சார்ந்த சிற்றூர்களிலும் வாழும் தமிழர்களை வரவேற்கிறோம், வாழ்த்துகிறோம்!

திருத்தணியும் அதை ஒட்டிய சிற்றூர்களும் தமிழ் நாட்டுடன் சேர்கின்றன என்ற மகிழ்ச்சி செய்தியைக் கேட்கின்ற அதே போது, தமிழ் நாட்டுடன் தொடர்பு கொண்டு வாழ்ந்து வரும் சில பகுதிகள் தமிழ் நாட்டிலிருந்து பிரிக்கப்பட்டு ஆந்திராவுக்கு அளிக்கப்பட இருப்பது வருத்தத்தை அளிப்பதாகும். திருவள்ளூர் தாலுக்காவிலும் பொன்னேரி தாலுக்காவிலும் உள்ள வளமிக்க பகுதிகளும் செல்வக் காடுகளும், புத்தூர் தாலுகாவிலுள்ள ஆரணியாறு நீர்த் தேக்கமும், படாஸ்கர் தீர்ப்புப்படி தமிழ் நாட்டிலிருந்து பிரிக்கப்பட்டு விடும். அங்கு வாழும் மக்கள் தமது விருப்பத்தைப் பல தடவைகள் தெரிவித்தும், சென்னை அரசாங்கம் அந்தப் பகுதிகளை இழந்து விட்டது வருத்தத்திற்குரியதாகும்.

நமது காமராஜர் மந்திரிசபை கோட்டை விடுவதில் பெயர் பெற்று விட்டார்கள். முன்பு தெற்கில் தமிழர்களுக்குரிய தேவிகுளம் பீர்மேடு முதலிய பகுதிகள் தமிழ் நாட்டுக்குத் தரப்படாத நிலையில், நமது மும்மூர்த்திகள்-காமராஜர், சுப்பிரமணியம், பக்தவச்சலம் மூவரும் டில்லிக்குச் சென்றார்கள். சில நிமிட நேரமே இவர்கள் மத்திய மந்திரிகளைக் கண்டு பேசினார்கள். இவர்களுடைய "வாதத் திறமையால்" தேவிகுளம் பீர்மேடு தமிழ் நாட்டுக்குக் கிடைக்காதது மட்டுமல்ல, கிடைக்க இருந்த-மாநிலச் சீரமைப்புக் குழுவினர் பார்த்து "இது தமிழ் நாட்டுடன் சேரவேண்டிய பகுதி!" எனத் தந்திருந்த செங்கோட்டைத் தாலுகாவிலும் பாதிப் பகுதியைக் கோட்டை விட்டுத் திரும்பி வந்தார்கள்! அந்த அசகாயச் சூரர்கள் தாம் படாஸ்கர் தீர்ப்பைப் பற்றி ஆந்திர அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தைகள் நடத்தச் சென்றார்கள்!

"சென்னை மாநில முதல் அமைச்சர் காமராஜர் ஆந்திர முதலமைச்சர் சஞ்சீவி ரெட்டியுடன் நீண்ட நேரம் படாஸ்கர் தீர்ப்பைப் பற்றி பேசிக்கொண்டிருந்தார்;" என்று பத்திரிக்கைச் செய்திகள் கூட வந்தன. நீண்ட நேரம் பேசினார் என்றதும், தமிழ் நாட்டின் உரிமைகளை நன்கு வலியுறுத்தியிருப்பார் தமிழ் நாட்டுக்குச் சாதகமான பலன்களை வாங்கித்தருவார் என்று எல்லோரும் நினைத்தார்கள். "நீண்ட நேரப்" பேச்சு வார்த்தைகளின் பின் கடைசியாக என்ன செய்தி வந்ததென்றால், "படாஸ்கரின் தீர்ப்பை அப்படியே ஒப்புக்கொண்டு விட்டோம்!" என்று கனம் காமராஜர் அறிவிக்கிறார் என்பதாகும். இதற்கு மும்மூர்த்திகள் கிளம்பிப் போயிருக்க வேண்டியதில்லை, காமராஜர் "நீண்ட நேரம்" சஞ்சீவி ரெட்டியுடன் பேசியிருக்கத் தேவையில்லை! அரசியல் விவேகமோ, உரிமையைப் பெற்றிடும் வலிவோ அற்றவர்களாக சென்னை மந்திரிகள் இருப்பதால்தான், மாநிலச் சீரமைப்பில் ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொரு இடத்தை இழந்தபடி வந்திருக்கிறார்கள்!

மற்ற மாநில முதலமைச்சர்கள் தத்தம் மாநிலங்களுக்கு விடாப்பிடியாகப் போராடி உரிமைகளைப் பெற்றிருக்கிறார்கள், ஆனல் நமக்குக் கிடைத்த முதலமைச்சர் "போகட்டுமே, போனல் என்ன?" என்று ஒவ்வொரு கட்டத்திலும் விட்டுக்கொடுத்து விட்டு திரும்பி வந்திருக்கிறார். சென்னை அரசாங்கம் மட்டும் பொறுப்புடனும் உறுதியுடனும் போராடியிருந்தால், தேவிகுளம், பீர்மேடுப் பகுதிகள் தமிழ் நாட்டுக்குக் கிடைக்காமற் போயிருக்காது. இவர்களுடைய திறமையற்ற போக்கால், அந்த வளமான பகுதிகளை தமிழ் நாடு இழக்க வேண்டி நேரிட்டது. அந்த வகையில் தமிழ் நாட்டின் உரிமைகளைப் பாதுகாக்க இந்த அரசாங்கம் தவறி விட்டது. மாநிலச் சீரமைப்பில் இந்தியாவிலேயே அதிகப் பலவீனமாக நடந்து கொண்ட அரசாங்கம் சென்னை அரசாங்கமாகத் தான் இருக்க முடியும் பொதுவாக இந்தப் பிரச்சினைகளில் ஏற்பட்ட வரவு-செலவு கணக்குகளைப் பார்த்தால். நியாயமாக இருந்திருக்கவேண்டியவைகளும் வந்திருக்க வேண்டிய வரவுகளும் செலவுப் பகுதியில் எழுதப்பட்டு விட்டன!

சென்னை மாநிலக் கவர்னரான திரு. ஏ. ஜே. ஜான் அவர்கள் திடீரென 1-9-57 இரவு 1 மணியளவில் இறந்தமை குறித்து மிகவும் துயருற்றோம்.

மலையாளப் பகுதியில் மிக நீண்ட காலமாக அரசியலில் ஈடுபட்டு, விடுதலை இயக்கத்தில் கலந்து, தனது கடமையை ஆற்றியவர்களில் திரு. ஜான் அவர்களும் ஒருவர். திருவாங்கூர்-கொச்சியில் அமைக்கப்பட்ட மந்திரி சபைகளில் அங்கம் பெற்றதுடன், 1952-54 வரை அங்கு முதலமைச்சராகவும். இருந்திருக்கிறார். மாநிலச் சீரமைப்புக்குப் பின் சென்னை மாநிலத்தின் கவர்னராக அவர் நியமிக்கப் பட்டதிலிருந்து, தனிப்பட்ட முறையில் எத்தகைய குறையும் ஏற்படா வண்ணம் எவரும் பாராட்டும் முறையில் நடந்துகொண்டு அவரைச் சந்தித்த அனைவரின் நன் மதிப்பையும் அவர் பெற்று வந்தார். உடல் நலம் குறைந்து காணப்பட்டபோதும், பல பொது நிகழ்ச்சிகளில் அவர் கலந்து கொண்டு, தமது கடமையைச் செய்தார்.

திரு. ஜான் அவர்களைப் பிரிந்து துயருறும் அவரது மனைவியாருக்கும் மற்றுமுள்ள உற்றார் உறவினர்க்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பாரதியாரும் புதுமைப்பெண்ணும்

(சி. சூரியகுமாரி)

பெண் என்றாலே கலங்கிய கண்களும், சலித்த மனமும் கொண்ட நடைப்பிணம் போன்ற ஓர் உருவம்—வெளி புலகத் தொடர்பற்று, தான் அடைந்துகிடக்கும் அறையின் நான்கு சுவர்களுக்கு வெளியில் என்ன நடக்கின்றது என அறியாமல், துன்பமே வடிவான ஓர் உருவம் நம் மனக்கண்முன் தோன்றிய காலம் போய்விட்டது. இன்று பெண் என்றால் கல்வியிலும் கலைகளிலும், இல்லறப் பண்பாடுகளிலும், வெளிபுலகத் தொடர்புகளிலும் சிறந்து விளங்கும் அன்பே வடிவான ஓர் உருவம் நம் மனக்கண் முன் தோன்றுகிறது. இத்தகைய புரட்சிகரமான மாறுதலை அவர்களிடையே உண்டாக்கிய சக்தி யாது? மாதர்களுக்கு மாவீரம் பிறக்கக் காரணம் என்ன? சாத்திரம் பேசும் சமுதாயத்தையே எதிர்க்கும் சக்தியை அவர்கள் எங்ஙனம் பெற்றார்கள்? பொருமி யழுது கொண்டிருந்த பெண்களைப் பொங்கியெழச் செய்த பொன்னான சக்தி எது?—ஐயமறக் கூறலாம், இப்புரட்சியின் பிறப்பிடம், புலவர் பாரதியின் புரட்சிப் பாடல்கள்தான் என்று!

இல்லறத்தின் ஒளிவிளக்கான மாதர்களை இழிவுபடுத்தி வந்த உலுத்தர்களுக்கிடையில் வாழ்ந்த புரட்சித் திலகமான அவர்,

"போற்றி போற்றி! ஓர்
ஆயிரம் போற்றி! நின்
பொன்னடிக்குப்பல்
லாயிரம் போற்றி காண்!"

எனப் புதுமைப் பெண்ணைப் போற்றுகின்றார். அவரது கற்பனையில் தோன்றிய 'புதுமைப் பெண்', நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையும், நிலத்தில் யார்க்கும அஞ்சாத நெறிகளும், திமிர்ந்த ஞானச் செருக்கும் உடையவள். அவள் பட்டங்களும் ஆள்வாள்; சட்டங்களும் செய்வாள்.

வீட்டின் விளக்கொத்த பெண்கள், தங்கள் அடிமை நிலையை உணர்ந்து, அடிமை விலங்குகளைத் தகர்த்தெறியும் காலம் வரும் என்றறிந்த பாரதியார்,

"விலகி வீட்டிலோர் பொந்தில்
வளர்வதை
வீரப் பெண்கள் விரைவில்
ஒழிப்பாராம்"

என்றார்.

அடிமை விலங்குகளைத் தகர்த்தபின், அவர்கள் மூடப் பழக்கங்களுக்கோர் முடிவுகட்டிக் கல்வியிற் சிறந்து விளங்குவர் என்றுணர்த்தக் கருதிய அவர்,

"மூத்த பொய்மைகள் யாவும்
அழிப்பாராம்;
மூடக் கட்டுக்கள் யாவுந்
தகர்ப்பாராம்"

என்றார்.

நாணமும் அச்சமும் நங்கையருக்குரியன என நவின்று, அவர்களது உள்ளக் கருத்துக்களை உள்ளவாறு கூறவிடாமல் அவர்களை நடைப்பிணங்களாக்கிய உலுத்தர்களைக்கண்டு சீறியெழுந்தார் பாரதியார்.

"நாணும் அச்சமும் நாய்கட்கு
வேண்டுமாம்;
ஞால நல்லறம் வீர
சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின்
குணங்களாம்"

என்று முழங்கினார்.

மாநிலத்தின் மணி விளக்காம் மங்கையரை வீட்டினுள் பூட்டி வைத்துக் கட்டாய மணம் செய்விக்கும் கொடுமையைக் கண்டு கொதித் தெழுந்தார் அப் பெருந்தகை.

"மாட்டை யடித்து வசக்கித்
தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக்
கொண்டு வந்தே
வீட்டினில் எம்மிடங் காட்ட
வந்தார், அதை
வெட்டிவிட் டோமென்று
கும்மியடி"

"நல்ல விலைகொண்டு நாயை
விற்பார், அந்த
நாயிடம் யோசனை கேட்ப
துண்டோ?
கொல்லத் துணிவின்றி
நம்மையும் அந்நிலை
கூட்டிவைத் தார்பழி கூட்டி
விட்டார்"

என்று பாடி, மனம் நொந்து கிடந்த மாதரை வீறு கொண்டெழச் செய்தார்.

அவரது கற்பனையில் தோன்றிய புதுமைப் பெண், மனம் விரும்பும் ஆண்மகனை மணம் புரிந்து, அவனது வாழ்வில் மனமாரப் பங்கேற்று இல்லறம் நடத்தும் இன் மொழியாள். இதை,

"காத லொருவனைக்
கைப்பிடித் தே, அவன்
காரியம் யாவினும் கை
கொடுத்து
மாத ரறங்கள் பழமையைக்
காட்டிலும்
மாட்சி பெறச்செய்து
வாழ்வமடி"

என்ற அவரது பாடலினால் அறியலாம்.

கவியரசர் பாரதியார், பண்பின் இருப்பிடம்; பெண்ணின் பெருமையறிந்தவர்; மாதரின் முன்னேற்றமே மாநிலத்தின் முன்னேற்றத்திற்கு வழிகோலும் என எண்ணிய பெருந்தகை. பெண்களை நாயினும் இழிவாக நடத்தி வந்த பல கயவர்கள் வாழ்ந்த காலத்தில் தான் வாழ்ந்தார் எனினும்—பெண்ணாசையைத் துறந்தால் தான் உலகம் உய்யும் என்றும், உலகம் அழிவது பெண்ணாலே என்றும், பெண்ணுரிமை கூடாது என்றும் கூறி வந்த கொடுமதியாளர்கள் பலர் வாழ்ந்த காலததில் தான் அவரும் வாழ்ந்தார் எனினும், அவர் மாதரின் மாண்பறிந்தவர். 'துன்பத்திற்குக் காரணம் பெண்' என்ற வீணர்களின் கருத்திற்கு எதிராக,

"துன்பம் தீர்வது
பெண்மையி னாலடா!
சூரப் பிள்ளைகள் தாயென்று
போற்றுவோம்"

என்று, அவர் துணிந்து பாடிய பாடலே இதற்குச் சான்றாகும் அன்றோ?

மேலான பார்வைக்கு

இந்தியாவின் ராஷ்டிரபதி பாபு ராஜேந்திர பிரசாத் அவர்களின் மேலான பார்வைக்கு பட்டமங்கலம் தலைவலி மாத்திரை தம்புசாமி எழுதிக் கொண்டதாவது!

திடீரென உங்களுக்குக் கடுதாசி போடவேண்டுமென்ற யோசனை எனக்கு வந்தது. கர்நாடகச் சீமையில் நீங்கள் சுற்றி வருகிறபோது, தலைவலியும் உடம்பு சுகவீனமும் வந்து இரண்டு நாளாக ரயிலை விட்டுக்கூட இறங்காமல் இருந்ததாக, பத்திரிக்கை படித்தவர்கள் சொன்னார்கள். அதனால் இதை எழுதுகிறேன். தலைவலி வந்ததால் பாதகம் ஒன்றுமில்லை. அது வரும், போகும்; சகஜம்! உங்களுக்கு எந்த வித ஆபத்தும் வராது; உங்கள் ஜாதகப் பலன்படி ஆயுசுக்கு மோசமில்லை. அடுத்த தடவைகூட நீங்களேதான் இப்போதுபோல் பெரிய பதவிக்கு வரப்போகிறீர்கள்! தலைவலி மாத்திரை தயாரிப்பதில் மட்டுமல்ல, ஜாதகம், சோதிடம், கைரேகை இதெல்லாம் எனக்கு நன்றாகத் தெரியும். உங்களிடம் ஒரு இரகசியத்தைக் கூடச் சொல்கிறேன். ஜாதகபலன் சரியாக இருந்தால்தான், நான் மருந்தே கொடுப்பேன்! ஜாதகம் பார்ப்பதில் உங்களுக்குப் பிரியம் என்று எனக்குச் சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் பட்டமங்கலம் பக்கம் வந்தாலும் சரி, அல்லது நான் டில்லிக்கு வந்தாலும் உங்கள் ஜாதகப்பலன் முழுவதையும் குறித்துக் கொடுக்கிறேன்! இப்படி எழுதி விட்டுப் பின் மறந்து விடுவேன் என்று நினைக்காதீர்கள், தலைவலி மாத்திரை தம்புசாமி சொன்ன சொல் தவறுதவன் என்பதை இந்தப் பக்கத்தில், என்னைப் பற்றித் தெரியாதவர்களைக் கேட்டால் கூடச் சொல்லி விடுவார்கள்!

உங்களுக்குத் தலைவலி ஏன் வந்தது என்று எனக்குப் பின்னால் புரிந்தது. தார்வார் என்கிற ஊரில் கர்நாடக இந்திப் பிரசாரக் கட்டடத்தைத் திறக்க நீங்கள் இருந்ததாகச் சொன்னார்கள். பின் தலைவலி ஏற்பட்டதால் அங்கு வேறொருவரை அனுப்பி விட்டு, இரயிலில் இருந்து விட்டதாகப் படித்தேன்! நான் சொல்வதைக் கேளுங்கள்! இந்தி ஒரு பெரிய தலைவலி என்று பலர் சொல்லக் கேள்விப் பட்டிருக்கிறேன்! நீங்கள் எதற்கு வீணாக இதில் போய் மாட்டிக் கொள்கிறீர்கள்! இந்திப் பிரச்சினை வந்ததும், என்னுடைய தலைவலி மாத்திரை ஏராளமாகச் செலவாகிறது. இருந்தாலும் நீங்கள் நமக்கு வேண்டியவர் என்பதால் இதைச் சொல்லி வைத்தேன்!

தலைவலி மட்டுமல்ல, இந்தி தெரியாதவர்கள் இந்தி படித்தால் வயிற்றுவலிகூட வந்துவிடும்! வேடிக்கைக்காகச்சொல்லவில்லை. சில பிள்ளைகள் அப்படி இந்தி படிக்கப் போய் கஷ்டப்பட, நான் வைத்தியம் செய்திருக்கிறேன்! நான் கூட புதிதாக ஒரு மாத்திரை தயார் செய்திருக்கிறேன். இந்தி பேசுவதற்கு முன் இரண்டு மாத்திரையும், இந்தி பேசிய பின் மூன்று மாத்திரையும் உபயோகித்தால், வலி அவ்வளவாக இருக்காது!

இந்தி தெரியாதவர்கள் இந்தியைப் பேசினால் வயிற்று வலி வருவது போல், இந்தியைக் கேட்டால் தலைவலி வந்து விடும்! அதற்கு முன்னதாக ஒரு மாத்திரையும், பின்னால் இரண்டு மாத்திரையும் சாப்பிட்டால் போதுமானது! இந்தியைப் பற்றி யோசித்தால் தலைவலி, வயிற்றுவலி இரண்டும் வரலாம்! அதற்கு முறையே மூன்று மாத்திரைகளும் நான்கு மாத்திரைகளும் சாப்பிடவேண்டும்!

தலைவலி மாத்திரையைப் பற்றி விளம்பரப் படுத்துகிறேன் என்று நீங்கள் நினைத்து விடக்கூடாது என்பதற்காக இத்துடன் நிறுத்திக்கொள்கிறேன், உண்மையில் இந்தக் கடுதாசியை எழுதி முடித்ததும் எனக்குத் தலைவலி வந்து விட்டது!

இப்படிக்கு
தலைவலி மாத்திரை
தம்புசாமி
பட்டமங்கலம்.

குறிப்பு: உங்களுடைய டில்லி விலாசத்துக்கு ஒரு பாட்டில் மாத்திரை அனுப்பியிருக்கிறேன். சமயோசிதம் போல் உபயோகித்து குணமடையவும்.

இந்தியாவின் சமதர்மம்!

★ —(0)— தேக்கி சாம்சன்னைவமர் ★

"நாளையதினம் புதிய வீடு ட்ட, கடைக்கால் போடப் போகிறேன். நீங்கள் அவசியம் அந்த சுபகாரியத்துக்கு வர வேண்டும்!"

"புதிய வீடு கட்டப்போகி யா?"

"ஆமாம். திட்டமெல்லாம் போட்டு ஆகிவிட்டது!"

"பெரிய திட்டமோ?"

"ஆமாம்! ஐந்தடுக்கு ாளிகை! நாலு ஏகருக்குத் தாட்டம்! கேட்டால் அதிச க்கவேண்டும், பார்த்தால் ரமிக்கவேண்டும்! அப்படி ரு பெரிய மாளிகையைக் கட் ப்போகிறேன்!"

"அவ்வளவு பெரிய மாளி கையைக் கட்ட ஏராளமான ணம் வேண்டுமே! உன்னால் டியுமா?"

"என்ன அப்படி பயப்படுகி ர்கள்? பணம் வருமென்றால் ரும், போவென்றால் போகும். ம்மிடமிருக்கிற பணம் அநேக ரகப் போதும். கொஞ்சம் வண்டியிருந்தால், புரட்டிக் காள்ளலாம். நமக்கு ஊரிலே ருக்கிற மதிப்புக்குநம்முடைய டைக்கு கைமாற்றுக்குக் காடுக்க நான்குபேர் தயாரா க் காத்துக்கொண்டிருக்கிறார் ள். அதைப்பற்றிக் கவலையே டவேண்டாம்! ஐந்தடுக்கு டியென்ன, மனம் வைத்தால் த்தடுக்கு மாடியே கட்டிவிட ம்!"

புதிய வீடு கட்டப்போகிற ன, திட்டத்தைப் போடும் பாழுது மிகவும் குதூகலத்து ன்தான் இருப்பான். அடிப் டை போடும்பொழுது இருக் ற உற்சாகம், சிறிது காலத் துக்கெல்லாம் அடங்கிவிடும். ஆறுமாதங் கழித்து, அவரைப் ார்த்தால், சோர்வுடன் உட் ார்ந்திருப்பார்.

"கட்டிட வேலை எப்படியிருக் றது?"

"ஏதோ நடக்கிறது!"

"என்ன இழுத்தாற்போல் சால்கிறீர்கள்?"

"ஆமாம். எதிர்பார்த்தபடி ன்றும் சரியாக நடைபெற ில்லை. விலைவாசி கூடிவிட் து. வீட்டுச் செலவு அதிக கிறது. வீடு கட்டப் பணம் றைந்துவிட்டது. அடிப் டையைப் பெரிய அளவில் பாட்டுவிட்டேன்! மேற் காண்டு கட்ட கொஞ்சம் நருக்கடியாயிருக்கிறது!"

"போட்ட திட்டப்படி ஐந்த க்கு மாடி கட்டியாகவேண் ம். என்ன செய்யப்போகிறீர் ள்?"

"ஐந்தடுக்கு மாடியென்றால் அப்படியே இருக்கவேண்டிய ில்லை. கொஞ்சம் கூட்டிக் குறைத்து, ஒரு மூன்றடுக்கு இரண்டு அடுக்கு மாடியளவுக் குக் கட்டினால் போதுமானது."

நேரு பேசுகிறார், காட்கில் பேசுகிறார், அமெரிக்காவிடம் அடகுவைத்து டி. டி. கே. கடன் கேட்கிறார்!

—(o)—

"போட்ட அளவைக்குறைக்க வேண்டிய அவசியம் என்ன வந்தது?"

"அதை ஏன் கேட்கிறீர்கள்? செங்கல்காரனுக்குப் பாக்கிநிற் கிறது. சுண்ணாம்புக்காரன் கடன் தரமாட்டேனென்கிறான். பாங்கியில் இருந்த பணமும் தீர்ந்துவிட்டது!"

"உனக்குத் தட்டுப்பட்டால், பணம் கொடுக்க எல்லோரும் தயாராக இருப்பதாகச் சொன் னாயே!"

"அப்பொழுது அப்படித் தான் நினைத்தேன், இப்பொ ழுது கெஞ்சிக் கூத்தாடி, இல் லாததையும் பொல்லாததை யும் சொல்லிக்கொண்டு அவர் களிடம் போய் நிற்கவேண்டி யிருக்கிறது. என்ன செய் வது?"

பெரிய ஐந்தடுக்கு மாளிகை யைக் கட்ட ஆரம்பித்து அதை முடிக்க முடியாமல் திண்டாடு கிற வீட்டுக்காரனைப்போல், ஒரு பெரிய ஐந்தாண்டுத் திட் டத்தை ஆரம்பித்து வைத்து, அதை எப்படிமுடிப்பது என்று தெரியாமல் இந்திய அரசாங் கம் அவதிப்பட்டுக்கொண்டி ருக்கிறது.

திட்டத்தைத் தீட்டிய பொழுது, இந்தியாவுக்கென் றால் இங்கிலாந்து உதவிபுரிய ஓடோடிவரும், அமெரிக்கா அப்படியே அள்ளி அள்ளிக் கொடுக்கும் என்றெல்லாம் இந் திய அரசாங்கம் எண்ணிக் கொண்டிருந்தது. நிதிநிலைமை களைப்பற்றி அபார நம்பிக்கை கொண்டிருந்த காரணத்தினால், எதைப்பற்றியும் கவலைப்படா மல், பண்டித நேருவும் அவரு டைய பக்க மந்திரிகளும் மிக இறுமாப்புடன் பேசிக்கொண்டி ருந்தார்கள். "திட்டச் செல வைச் சமாளிக்க முடியாது" என்று யாரேனும் கூறினால், உடனே அவர்மீது பாய்ந்தார் கள். திட்டத்தின் அளவைக் குறைப்பதோ, காலத்தை நீட் டுவதோ கூடாது எனத் திட்ட வட்டமாக அறிவித்தார்கள்.

இவர்கள் எதிர்பார்த்தபடி நிலைமைகள் சேரவில்லை. இவர் கள் கணக்குப் போட்டபடி வெளிநாட்டு முதல் இங்கு வர வில்லை.

மகமதுவை நோக்கி மலை வர வில்லை. அப்படியென்றால், மலையை நோக்கி மகமது புறப் படவேண்டியதுதான் என்று எந்த வெளிநாடுகளிலிருந்து கடன் தொகைகள் இங்குவரும் என்று எதிர்பார்த்து வர வில்லையோ அந்த நாடுகளுக்கு இவர்கள் போகத் தலைப்பட் டுள்ளார்கள். அமெரிக்க பணக் குன்றை நோக்கி, இந்திய நிதி மந்திரி கனம் டி. டி. கிருஷ்ண மாச்சாரி புறப்பட்டுச் சென்றார்.

ஆரம்பத்தில் இந்திய அர சாங்கத்தினர் கொஞ்சம் இறு மாப்புடனேயே இருந்தார்கள், யாரிடமும் போய் எதுவும் கேட் கப்போவதில்லை என முழங்கி னார்கள். ஆனால் எதிர்பார்த்த படி பெட்டியில் பணம் சேர வில்லை.

பிறகு "அந்நிய முதலாளி கள் இங்கு வருவதில் அச்சம் படவேண்டாம். அவர்களுக்கு இந்த இந்த பாதுகாப்புகள் தருவோம், இன்ன இன்ன சலு கைகள் கிடைக்கும்" என அயல்நாட்டு முதலாளிகளுக்கு ஆசை வார்த்தைகள் சொன் னார்கள்; அவ்வளவு சுலபத் தில் மயங்கிவிடுவதா பணம்! அயல்நாட்டு முதல் வரவில்லை.

இந்திய அரசாங்கத்தின ருக்குக் கவலை மூண்டது. எப் படியாவது கடன் வாங்கி வந் தால்தான் திட்டத்தை ஓரள வாவது நிறைவேற்ற முடியும் என்ற நிலை பிறந்து காமன் வெல்த் அமைப்புக்குத் தலை மை வகிக்கும் பிரிட்டிஷ் அர சாங்கத்தைக் கேட்க, வி. கே. கிருஷ்ணமேனன் நேரில் பறந்து சென்றார். அவருக்குப் பிறகு அவருடைய குரு பண் டித நேரு சென்றார். இருவ ருக்கும் நல்ல வரவேற்பும் உப சரிப்பும் கிடைத்தன. ஆனால் இந்தியாவுக்கு வேண்டிய கடன் மட்டும் கிடைக்கவில்லை.

மற்ற இடங்களில் கடன் கிடைக்காமற்போகவே, கடை சியாக அமெரிக்காவை நோக்கி நிதிமந்திரி டி. டி. கிருஷ்ணமாச் சாரியார் சென்றார். அங்கு அமெரிக்கத் தலைவர் ஐசனோவ ரைப் பார்த்தார், எதிர்க்கட்சி யின் முக்கிய தலைவர் அடிலெய் ஸ்டிவன்சனை பார்த்தார், உல கப் பாங்கித் தலைவரைப் பார்த் தார். காமன்வெல்த் நிதிமந்திரி களைப் பார்த்தார், அமெரிக்கா விலுள்ள பெரும் பாங்கித் தலை வர்களைப் பார்த்தார், தனிப் பட்ட முதலாளிகளைப் பார்த் தார். டாலர் சத்தம் எந்தப் பக்கத்தில் கேட்டாலும் அந்தப் பக்கம் திரும்பி "அரகர மகா தேவா! அமெரிக்க தேவ தேவா!" எனக் கும்பிடுபோட்டு பணம் கேட்டிருக்கிறார்.

கடன் வாங்குகிற இடத்தில், அவர்கள் நம்பிக்கைக்குத் தகுந்தபடி நடந்துகொண்டால் தானே கடன் கிடைக்கும். அமெரிக்க முதலாளிகளைப் பார்த்தவுடன், அவர்களைத் திருப்திப்படுத்த சில வாக்குறு திகள் டி. டி. கிருஷ்ணமாச்சாரி யார் தந்துள்ளார்.

சமதர்ம அடிப்படையில் சமு தாயத்தை அமைப்பதுதான் தங்கள் கொள்கை எனக் காங் கிரசுக் கட்சி கூறுகிறது, சம தர்ம அடிப்படைதான் தங்கள் அரசியல் குறிக்கோள் என்ப தைக் காங்கிரசு ஆட்சியும் கூறு கிறது. ஐந்தாண்டுத் திட்டத் தைப் போடும்பொழுதுகூட "இந்த நாட்டுப் பொருளாதா ரத்தைச் சமதர்ம வழியில் அமைப்பதுதான் ஐந்தாண் டுத் திட்டத்தின் நோக்கம்" என்று கூறினார்கள்.

அவர்களுடைய கட்சி, அவர் களுடைய திட்டம் எல்லாம் "சமதர்மம் சமதர்மம்" என்று கூறியபடி இருக்கின்றன. சம தர்ம அடிப்படையைப்பற்றி பண்டித நேரு பேசாத கூட்ட மில்லை, சொல்லாத நேரமில்லை!

இங்கு சமதர்மத்தைப்பற்றி இவர் கள் வாய்நிறையப் பேசுகிறார்கள். அங்கு அமெரிக்க முதலாளிகள் மனங் குளிரும் வகையில் டி. டி. கிருஷ்ண மாச்சாரியார் கூறுகிறார்: "இனி மேல் தொழில்துறை எதையும் தேசீய மயமாக்கும் உத்தேசம் எங்களுக்குக் கிடையாது." என்று!

சமதர்மக் கொள்கையே எங் கள் கொள்கை என்று காங்கிர சுக் கட்சி கூறிக்கொண்டது!

சமதர்மத்தை நிலைநாட்ட நாங்கள் ஆட்சிக்குப்போகவேண் டும் எனக் காங்கிரசுக்காரர்கள் மக்களின் வாக்குரிமைகளைப் பெற்றார்கள்!

சமதர்மப் பொருளாதாரத் தை உண்டாக்கவே ஐந்தாண் டுத் திட்டத்தைப் போடுவதாக இந்திய அரசாங்கம் கூறியது!

எந்த சமதர்ம அடிப்படைக் கொள்கையில் ஐந்தாண்டுத் திட்டத்தைப் போட்டிருப்பதா கக் கூறினார்களோ, அந்த அடிப்படை "கொள்கையை" காற்றில் பறக்கவிட்டு கடனைப் பெற்று திட்டத்தை நிறை வேற்ற டி. டி. கே. முயல்கிறார்!

கண்ணை விற்றுச் சித்திரம் வாங்க முயல்கிறார்கள்!

சமதர்மத்தை மறுத்து மட்டுமல்ல, நமது எதிர்கால வாழ்வைப பணயம் வைத்து,

(10-ம் பக்கம் பார்க்க)

இலக்கியம்

கைப்பட்ட ஒருத்தியைக் கைவிடலாமோ?

★ இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ. ★

ஆற்றல் மிக்க அந்தத் தலைவனின் கண்களில் அழகு மிக்க அந்த நங்கை நல்லாள் எப்படியோ பட்டு விடுகிறாள். அவளை அடைய அரும்பாடு படுகிறான்.

அவள் நீர்த் துறைக்குச் செல்லும்போது பின்னால் தொடர்கிறான்; அவள் நீராடும்போது கரையிலுள்ள செடி கொடிகளின் மறைவில் ஒளிந்து நின்று பார்க்கிறான். அவள் கண்ணில் படும்படி அவளது கவனத்தைத் தன்பக்கம் திருப்ப மெல்லிய குரலில் பாட்டுப்பாடிப் பார்க்கிறான்; அவள் கையில் ஏந்தியிருக்கும் பந்து கீழே விழுந்து உருண்டோடினால், ஓடிப்போய் அதனை எடுத்துக் கொண்டு வந்து அவளிடம் கொடுக்கிறான். அவள் பூப் பறிக்க மலர்ச் செடியின் அருகில் சென்றால் இவனே தாவிச் சென்று மலர்கள் பறித்து அவள் கையில் தருகிறான். அவளுடைய அன்பையும் இரக்கத்தையும் பெற கடைப் பிடிக்க வேண்டிய எல்லா முறைகளையும் மேற் கொள்ளுகிறான். அவளோ தன்னை அவன் தொடரும் போதும், பந்தைக் கொண்டு வந்து கொடுக்கும் போதும், மலர் பறித்துத் தரும்போதும் ஒருவித அச்சமும் நாணமும் கொள்கிறாள். எழிலும் ஏற்றமும் மிக்க ஆடவன் ஒருவன் தனக்காகப் பரிந்து பணிகள் பல புரிந்து, தன்னிடம் அன்பு காட்டுவதை எண்ணி எண்ணி அவன் பால் மெல்ல மெல்ல இரக்கங் காட்டுகிறாள். இரக்கம் அன்பாக மாறி, அன்பு நாளடைவில் காதலாக மாறுகிறது. இருவருடைய கண்களும் பேசுகின்றன; கரங்கள் ஒன்றையொன்று பற்றுகின்றன; இருவரும் ஆரத்தழுவுகின்றனர்; முத்தங்களைப் பரிமாறிக் கொள்கின்றனர்; இன்பக் கடலில் திளைக்கின்றனர்.

இருவரும் பொழுது சாயும் வேளை வரையில் பேசி மகிழ்ந்திருக்கின்றனர். "பொழுது போய் விட்டது நான் போக வேண்டும்" என்று சொல்லிக் கொண்டு வெடுக்கென்று எழுகிறாள் தலைவி.

"இன்னமும் சிறிது நேரம் இருந்து விட்டுப் போகலாம்" என்கிறான் தலைவன்.

"நான் உடனே போகவேண்டும். இல்லையென்றால் என் தோழியும் தாய் தந்தையரும் என்னைத் தேடி வந்து விடுவார்கள்" என்கிறாள்.

"உன்னோடு உன் தோழி வருவதில்லையா?" என்று அவன் வினவுகிறான்.

"தினைப்புனத்தைக் காக்க அவளை நான் வைத்து விட்டு வருவதால் அவள் என்னோடு வர முடிவதில்லை" என்கிறாள்.

"நான் தினைப்புனம் பக்கம் வரலாமா?" என்று கேட்கிறான்.

"அங்கு வர வேண்டாம். வந்தால் தோழியும் பிறரும் நம் மீது ஐயங்கொள்ள வழி ஏற்படும். நான் பிறகு இங்கு வந்து காண்கிறேன்" என்று சொல்லி விட்டு தலைவி ஓட்டமாய் ஓடி விடுகிறாள்.

தலைவன் மனமகிழ்ச்சியோடும் மன அமைதியோடும் தன் இல்லம் ஏகுகிறான்.

தலைவி காதலனைப் பெற்ற மகிழ்ச்சியால் தினைப்புனத்திற்குத் திரும்பினாள் என்றாலும், அச்சமும் நாணமும் அவள் உள்ளத்தில் குடியேறுகின்றன. தன்னுடைய களவொழுக்கம் யாருக்கேனும் தெரிந்து விட்டால், பிறகு பெற்றோரால் எப்படிப்பட்ட தண்டனை கிடைக்குமோ என்று எண்ணி உளநடுக்கங் கொள்கிறாள்.

தலைவியின் நடையுடை நடிப்புக்களிலே வேறுபாடு இருப்பதைச் சில நாட்களாகக் கண்டு வரும் தோழி, தலைவியைப் பற்றி ஐயுறவு கொள்கிறாள். ஆனால் அது பற்றி வெளிப்படையாகத் தலைவியிடத்தில் கேட்டறிய வேண்டாம், நாளடைவில் கண்டு கொள்ளலாம் என்ற எண்ணத்துடன் ஏதும் அறியாதவள் போல் தோழி இருந்து வருகிறாள்.

தலைவன் தலைவியைக் காணும் எண்ணத்துடன் நாள் தோறும் பொய்கையின் அருகில் வந்து, நெடு நேரம் வரையில் காத்திருந்து விட்டு, ஏமாற்றத்துடன் வீடு திரும்பும் நிலையில் இருந்து வருகிறான். 'தினைப்புனத்திலாவது அவளைச் சென்று பார்க்கலாமா' என்ற நோக்கத்துடன் சில நாட்கள் அங்கு போய்ப் பார்க்கிறான். தலைவியுடன் தோழியும் பிற ஏவலாட்களும் இருப்பது கண்டு வழியே திரும்பி வருகிறான். தலைவன் எப்படியும் அவளைத் திருமணம் செய்துகொண்டு விடவேண்டும் என்று துடியாகத் துடிக்கிறான்.

தலைவி தலைவனைப் பார்க்க வேண்டாம் என்று சில நாட்கள் வரையில் இருந்து பார்க்கிறாள். கடைசி வரையில் அவளால் அப்படியே இருக்க முடியவில்லை. எப்படியும் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் அவளுக்குத் தோன்றுகிறது. ஒரு நாள் அச்சத்தை ஒருவாறு போக்கிக்கொண்டு பொய்கைக்குப் போய்வர முயலுகிறாள்.

தலைவன் வழக்கம் போல் பொய்கைக் கரைக்கு வந்து, தலைவி வந்தால் அவளிடம் கொடுப்பதற்கென்று தழைகளினாலும் மலர்களினாலும் ஆன உடை ஒன்றைக் கையிலேந்திக் காத்துக் கொண்டிருக்கிறான். தலைவி தொலைவில் வருவதைக் கண்டு மிகவும் மகிழ்ந்து அவளது வரவை ஆவலோடு வரவேற்க எதிர்நிற்கிறான்.

தலைவி சென்றவுடன், அவள் எங்கு செல்கிறாள் என்பதை மறைவாக இருந்து கண்டறிய வேண்டும் என்ற எண்ணத்துடன் தோழி மெதுவாக அவளைப் பின் தொடர்கிறாள்.

தலைவி நெருங்கியதும் தலைவன் பாய்ந்து சென்று அவளது இரு கரங்களையும் பற்றி "கண்ணே! ஏன் நீ இவ்வளவு நாட்களாக இங்கு வரவில்லை! நான் எத்தனை நாட்களாக உனக்காக இங்குக் காத்துக் கிடக்கிறேன் தெரியுமா?" என்று அன்பு கனிய வினவுகிறான்.

அதற்குத் தலைவி "நான் எப்படி வரமுடியும்? தோழியும் பிறரும் என்னைக் கண்காணித்துக் கொண்டிருக்கும் போது அவர்களை மீறி வர எனக்கு வழி ஏது?" என்று விடை பகருகிறாள்.

"நாம் இருவரும் திருமண செய்துகொண்டு விட்டா இப்படியெல்லாம் அச்சப்ப வேண்டியிருக்காதல்லவா?" என்று கேட்கிறான்.

"நமது திருமணத்திற்கு எ தாய் தந்தையர் ஒப்புக் கொ வார்கள் என்று நான் எப்படி கூற முடியும். யார்போய் அவ களிடம் தெரிவிப்பார்கள் நான் நாணத்தை விட்டு தெரிவிக்க முடியுமா? அ படியே தெரிவித்தாலும் நம களவொழுக்கச் செய்தியறிந் எனக்குக் கடுந் தண்டனை ஏ னும் கொடுக்க முயன்று வி டால் நான் பிறகு என் செய்ய முடியும்?" என் தலைவி கூறுகிறாள்.

"என் அன்புக்குரிய மட தையே! உன்னைக் காண நான் தினைப்புனத்தருகே பல த வைகள் வந்தேன். நீ உ தந்தையார் உனக்குக் கொடு திருந்த கிளியோட்டும் கரு யைக் கையில் வைத்து கொண்டு கிளிகளை விரட்டி கொண்டிருந்தாய். உன் பக்க தில் தோழியும், பிறரும் இரு ததால் உன்னை நேரிடையா அருகே வந்து காண முடி வில்லை. நான் தொலைவி நின்று ஒளிந்திருந்து பார்த் விட்டுச் சென்று விடுவேன் இன்று பொழுது போனவுட தினைப்புனத்தில் வேறு யாரு இருக்க மாட்டார்களல்லவா நான் அங்கு வரலாமா?" என்று கேட்கிறான்.

தலைவி என்ன சொல்லுவ விடையாக என்று தெரியாம தலை குனிந்த வண்ணம் பேச மலிருக்கிறாள்.

"நான் உனக்குக் குவ மலரைப் பறித்துச் சூட்டு றேன். முதலில் நாம் ஒருவ யொருவர் கண்டு குலா இருந்தோமே அந்த மலைப்ப கத்துச் செல்வோமே? அங் நான் வரட்டுமா? நாம் இரு ரும் விளையாடியிருப்போமா?" என்று வினவுகிறான்.

தலைவி அதற்கும் மறுமொ ஏதும் கூறாமல் அப்படியே நாணத்தால் நிற்கிறாள்.

தலைவன் தலைவியின் முகத்தை உயர்த்திப் பிடி துக்கொண்டு, "கண்ணே நான் கேட்பவைகளுக்கு விடை யாக உன் இனிய மொழி ஒன் றைக் கூறமாட்டாயா? உனது இனிய சொற்களைக் கேட் நான் எவ்வளவு ஆவலுடன் நிற்கிறேன் தெரியுமா? என டைய உள்ளம் மகிழும்படி இனிய மொழி ஒன்றைக் கூற மாட்டாயா? உன்னுடைய வாய்மொழியினைச் சுவைக் எவ்வளவோ ஆவல் கொண் டிருக்கிறேன்" என்று கூறு றான்.

தலைவனின் கூற்றுகளைக் கேட்டு உளங்கனிந்த தலைவி "வாருங்கள் அந்த மலைப்ப கத்திற்குப் போவோம்!" என்று முதன் முதல் ஒருவரை யொருவர் கண்டு கொண் இடத்திற்கு அழைத்துச் செல் கிறாள்.

அங்கு சென்றதும் தலைவன் தன் அன்பின் காணிக்கையான தழையுடையை அவளிடம் கொடுக்கிறான். அவளும் அன்போடு அதனை வாங்கிக் கொள்கிறாள். தலைவன் அவளை ஆரத்தழுவ முயலுகிறான், தலைவி அவனைத் தடுத்து நிறுத்தி "நீ என்னைப் பிற்பாடு ஆரத் தழுவலாம்!" என்று கூறிப் புன் சிரிப்பு காட்டி "யாரேனும் பார்த்து விடுவார்கள், நான் போய் வருகிறேன்" என்று சொல்லி விட்டுத் தன் இல்லம் நோக்கிச் செல்கிறாள்.

மூங்கிற் காடுகள் உயர்ந்து தோன்றும் மலைச் சரிவிலேயுள்ள தன் குடிசை நோக்கி அவள் செல்வதைத் தலைவன் ஏக்கத்துடனும் ஏமாற்றத்துடனும் அசைவற்று உற்றுக் கவனித்துக்கொண்டு நிற்கிறான்.

தலைவனும் தலைவியும் உரையாடியதையும், இருவரும் கூடிக் குலாவி மகிழ்ந்திருந்ததையும் மறைந்து நின்று கவனித்துக் கொண்டிருந்த தோழி அசைவற்று நிற்கும் தலைவனருகில் வருகிறாள். தோழி வருவதைக் கடைக்கண் பார்வையால் அறிந்து கொண்ட தலைவன், தன் குறை அவளுக்குப் பட்டால் அவள் ஏதேனுமுதவி புரியக் கூடும் என்று கருதி அவள் காதில் விழுமாறு தன் நெஞ்சிற்குத் தானே சிலவற்றை உணர்த்துவது போல் கூறுகிறான்.

"என் நெஞ்சே! அதோபார் அவளை! கலைமானை விட்டுப் பிரிந்து செல்கிற பெண்மானைப் போல் அவள் தன் குடிசை நோக்கிச் செல்வதைப் பார்! அவளைப் போக விட்டு விட்டு இப்பொழுது ஏமாந்திருக்கிறாயே! ஒருத்தி உன்கையில் அகப்பட்டால் அவளது நலனை நுகர்ந்து மகிழாது அவளைக் கை விடலாமா? விடக் கூடாதே! இது கூட உனக்குத் தெரியவில்லையே!" என்று கூறித்தன் ஏக்கத்தை வெளிப்படுத்துகிறான்.

தலைவனின் தோற்றப் பொலிவையும், தலைவி மீது அவன் கொண்டுள்ள அன்பையும் கண்ட தோழி, தலைவிக்கு ஏற்ற தலைவன்தான் அவன் என்ற முடிவுக்கு வந்து அவனது ஏக்கத்தைப் போக்குவதற்கான முறையில் திருமண ஏற்பாடுகளைக் கவனிக்கலாம் என்ற எண்ணத்துடன் அவ்விடம் விட்டு அகல்கிறாள்!

* * *

இது நற்றிணை-204 ஆம் செய்யுளின் உட்பொருளைக் கொண்டு வரையப்பட்ட காதற் காட்சியாகும். இந்த செய்யுள் குறிஞ்சித் திணையைச் சார்ந்த 'புன்னின்ற தலை மகன் ஆற்றானாய்த் தோழி கேட்பத் தன் நெஞ்சிற்குச் சொல்லியது' என்ற பிரிவைச் சேர்ந்ததாகும். இந்தச் செய்யுளை இயற்றியவர் மள்ளனார் என்ற புலவராவார். இவரைப் பற்றிய வரலாறு ஒன்றும் தெளிவாகத் தெரியவில்லை. இவர் பாடிய பாட்டுக்கள் நற்றிணையில் ஒன்றும், அகநானூற்றில் இரண்டுமாக மூன்று காணப் பெறுகின்றன.

தளிர்சேர் தண்தழை தைஇ நுந்தை
குளிர்வாய் வியன்புனத்து எற்பட வருமோ
குறுஞ்சுனைக் குவளை அடைச்சிநாம் புணரிய
நறுந்தண் சாரல் ஆடுகம் வருகோ
இன்சொல் மேவலைப் பட்டவென் நெஞ்சுணக்
கூறினி மடந்தைநின் கூரெயிறு உண்கென
யான்தன் மொழிதலின் மொழியெதிர் வந்து
தான்செய் குறியில் இனிய கூறி
ஏறுபிரி மடப்பிணை கடுப்ப வேறுபட்டு
உறுகழை நிவப்பின் சிறுகுடிப்பெயரும்
கொடிச்சி செல்புறம் நோக்கி
விடுத்த நெஞ்சம் விடலொல் லாதே

[நற்றிணை-204]

[பொழிப்புரை; "மடந்தாய்! தளிர் சேர்ந்த மெல்லிய தழையை உடுத்து உன் தந்தையினுடைய கிளி விரட்டும் கருவியாலே பாதுகாக்கப் படுகின்ற அகன்ற தினைப்புனத்தின் கண்ணே பொழுது போதலும் வருவேனோ? பறித்த சுனைக்குவளை மலரைச் சூடி நாம் முன்பு புணர்ந்த நறிய தண்ணிய மலைப்பக்கத்தில் விளையாடுவோமாதலால் அதற்கு அங்கு வருவேனோ? இவற்றுக்கு விடையாக நின் இனிய மொழியை விரும்புதலால் அம்மொழிபெறாமல் வருந்துகின்ற என்னுள்ளம் கொண்டு மகிழும்படி இப்பொழுது ஒருமொழி கூறுவாயாக; உன்னுடைய கூரிய எயிற்றைச் சுவைத்து மகிழ்வேன்" என நான் நெருங்கி அவளிடத்து இனிய சொற்கள் பலவற்றைக் கூறலின் என் சொல்லுக்கு எதிராக வந்து தான் முன்பு செய்த குறியிடத்து அழைத்துக் கொண்டுபோய் 'நீ பின்னர் என்னைத் தழுவுவாயாக' என இனிய மொழிகளைக் கூறிக் கலைமானைப் பிரிந்தகல்கின்ற பெண் மான்போல நின்னை வேறாகக் கொண்டு மிக்க மூங்கில் உயர்ந்து தோன்றுதலையுடைய தன் சிறு குடியின் கண்ணே பெயர்ந்து செல்லும் கொடிச்சி செல்லுகின்ற பின்புறம் நோக்கி அவளைக் கைவிட்டு விட்டு ஏமாந்திருந்த நெஞ்சமே, ஒருத்தி உன் கையில் அகப்பட்டால் அவளது நலனை நுகர்ந்து மகிழாது கை விடலாமா? விடலாகாதே!"

தண்-குளிர்ந்த; தைஇ-தைத்து; எற்பட-பொழுது போகும் நேரம்; ஏறு-ஆண் விலங்கு; மடப்பிணை-பெண்மான்; கடுப்ப-ஒப்ப; கழை-மூங்கில்; கொடிச்சி-மலை நாட்டுப் பெண்,]

தலைவியைத் திருமணம் செய்து கொள்ள விரும்பும் தலைவன், அது தோழியின் மூலமே எளிதில் ஆகக் கூடிய ஒரு செயல் என்று கருதி அவளுக்கு குறிப்பால் உணர்த்தும் தன்மை இச்செய்யுளில் நயம்பட விரித்துரைக்கப் பட்டிருக்கிறது.

களவொழுக்கக் காதல் எந்த அளவுக்குச் சிறந்தோங்கிப் போற்றப்பட்டு வந்தது என்பதை இச் செய்யுளின் மூலம் இனிது அறியலாம்.

அன்பின் காணிக்கை[...] தலைவன் தலைவிக்குத் [...]யுடை கொடுத்தல் அ[...] மரபு என்று தெரிய வரு[...]

தழையுடை உடுத்தல்[...] களை விரட்ட கிளிகடி[...] கொள்ளுதல், குவளை ம[...] சூடுதல், வாயொடு வா[...] தம கொடுத்தல் போன்[...] கங்கள் இதன் கண் கூ[...]டிருக்கின்றன.

தலைவனை விட்டுத் [...] பிரிந்து செல்வதற்கு [...]மானை விட்டுப் பெண்[...] பிரிந்து செல்வது உவ[...]கக் கூறப்பட்டிருக்கிறது[...]

குறிஞ்சி நிலப் பெ[...] கொடிச்சி என்று அ[...] வழக்கமாகும்.

எங்கும்-எதிலும் பண்டித நேரு!

"பிலிம் இந்தியா" என்ற சினிமாப் பத்திரிக்கையில், கேள்வி-பதில் பகுதியில் "இந்தியாவில் அதிகமான தடவை திரையில் காட்டப்படுகின்ற பெரிய சினிமா நட்சத்திரம் யார்?" என்ற கேள்வியை ஒரு வாசகர் ஒரு சமயம் கேட்டிருந்தார். அதற்கு "பிலிம் இந்தியா" ஆசிரியர் "இந்தியாவின் பிரதமர் பண்டித நேரு!" என்று பதிலளித்தார்!

இந்தியாவில் இருக்கும் எல்லா சினிமாக் கொட்டகைகளிலும் நாள் தவறாமல் காட்டப்படும் அரசாங்கச் செய்திப்படங்களில் பண்டித நேரு வந்து போகாத சம்பவம் இல்லாமற் போகாது!

"பண்டித நேருவுக்கு இருக்கிற நெருக்கடியான சுற்றுப்பிரயாணங்களாலும் திறப்புவிழாக்களாலும் அவரதுநேரம்பெரும்பாலும் தீர்ந்துவிடுவதால், பாராளுமன்றத்தில் நுழைந்த பின்தான் அன்றைக்கு வரப்போகிற மசோதாக்களைப்பற்றி அவர் கவனிக்கத் தொடங்குவார்!" என்று பாராளுமன்றத்தைப் பார்வையிட்ட ஒருவர் ஒருமுறை கூறினார்.

பண்டித நேருவுக்கு அதிகமான விளம்பரம் தேடித்தேடி தரப்படுகிறது. அதிலும் அவர் சலிப்படைவதாகத் தெரியவில்லை!

பெரிய அணைக்கட்டுகள், திட்டங்கள் நிறைவேறுகிற தென்றால், பண்டித நேருவுக்கு அதன் திறப்புவிழா ஒதுக்கப் பட்டு விடுகிறது.

உதாரணமாக தாமோதர்ப் பள்ளத்தாக்குத் திட்டத்தின் கீழ், திலையா அணைக்கட்டு, கோனார் அணைக்கட்டு, மைதான் அணைக்கட்டு, பன்சத் அ[...]கட்டு ஆகிய நான்கு அ[...]கட்டுகள் கட்ட திட்டமிட[...]டன. அத்துடன் பொகா[...] திலையா ஆகிய இரண்டு [...]மாண்டமான மின்சாரத் [...]டங்களும் சேர்க்கப்பட்[...]தன. எல்லாவற்றிற்கும் [...]த்து மொத்தம் 110 [...] ரூபாய்க்குமேல் செலவு [...]பிடப்படுகிறது. மேல் சொ[...]வற்றில் பன்சத் அணைக்[...] தவிர மற்றவைகள் மு[...]டைந்துவிட்டன.

திலையா அணைக்கட்டின் [...]ப்புவிழா 1953 பிப்ரவரி ம[...]தில் நடைபெற்றது. அ[...] திறப்பு விழாவைச் செய்தவர் ப[...] நேரு!

கோனார் அணைக்கட்[...] திறப்பு விழா 1955 அக்டோ[...] மாதத்தில் நடைபெற்[...] அந்தத் திறப்பு விழாவைச் செ[...] பண்டித நேரு!

மைதான் அணைக்கட்[...] திறப்பு விழா 1957 செப்ட[...] மாதத்தில் நடைபெற்[...] அந்தத் திறப்பு விழாவைச் செ[...] பண்டித நேரு!

பொகாரோ மின்சார உற்[...]நிலையத்தின் திறப்புவிழா[...] பிப்ரவரியில் நடைபெ[...] அந்தத் திறப்பு விழாவைச் செ[...] பண்டித நேரு!

திலையா மின்சார உற்[...]நிலையத்தின் திறப்புவிழா[...] பிப்ரவரியில் நடைபெ[...] அந்தத் திறப்பு விழாவையும் [...]வர் பண்டித நேரு!

தாமோதர் பள்ளத்தா[...] திட்டத்தின்கீழ் நடை[...] முக்கியமான எல்லா [...] விழாக்களையும் ப[...] நேருவே செய்து வை[...]ளார்!

கள்ளத் தோணி

(கே. ஜே. சம்பத்)

டுச்சாம நேரம்...!

வசர அவசரமாகச் சிலர் ந்த கடலோரக்கிராமத்தை டு வந்து கொண்டிருக்கி ன்! அன்று இரவே அவர் நாடு கடந்தாக வேண்டும்! லாவிட்டால் அவர்கள் உடலை விட்டுப் பிரிக்கப் விடும்!... இந்த அபாயத் ந்து தப்பிச் செல்ல ஒரே கந்தானிருந்தது! கடல் சம்! இரவு நடு நிசிக்குப் ஒரு கள்ளத்தோணி பட ஆயத்தமாகிக் கொண் து! சீக்கிரம் அதில் போய்விடவேண்டும் பதைப்பும் ஆவலும் மிக் ளாய் அவர்கள் ஓட்ட நடையுமாகப் போய்க் ண்டிருக்கிறார்கள்! ந்து நிறைந்த அப்பய ந் ஆண்களோடு பெண் கலந்திருக்கிறார்கள்!...

ம் கரையை விட்டுப் புறப் விட்டது. ஒளி இழந்த பற்றிக் கவலைப் படா அது நகர்ந்து கொண்டி து. கார் வானும் கருங் மையிருளில் ஐக்கிய டந்தன. ஓடம் செல்வ துடுப்பின் அசைவில் சலசலப்பு ஒலி மட் அறிவித்துக் கொண்டி மற்றப்படி திசையோ, ன்ன இருக்கிறது-எது து என்பதையோ ள் உணர்ந்து கொள்ள ல்லை!

அரங்கில் ஒய்யாரமாய் வளர்ந்து நெளிந்து நாட்டிய ராணிபோல் கடலில் அசைந்தா சென்றது. குளுமையும் மையும் இழைந்த இளங் அவர்கள் அலுத்த தழுவி இதமளித்தது. ல் சற்று முன் இருந்த தேய்ந்து லேசாக ஒளி கொண்டிருந்தது. தார இங்கும் அங்குமாகத் க் கண் சிமிட்டின.

அசைப்பவன் நம் யோடு வானை அண் பார்த்தான். பிறகு ஒரு திரும்பி, தான் விட்டு இருந்த திக்கை ன். அப்பொழுது கார்முகில் சிறையிலி விடுதலையாகி வெளி கொண்டிருந்தது. இருள் ர, பால் வெள்ளம் நில து வழிந்து கடல் அலை த்தது. தன்னைப் சீராட்டி வளர்த்த வையும் அவர்தம் களையும் பெரு

மையோடு பேணிக் காத்த அந்தப் புனித பூமி, படகோட்டியின் கண்களுக்கு வெறும் நிலமாக அப்பொழுது தோன்றவில்லை. தன்னை ஈன்ற அன்னையே உயர்ந்தோங்கி நிற்பது போலிருந்தது. அவள் பாதம், கடலாழத்திலும் திருமுகம்-வானத்து முழு மதி போலும் காட்சி தந்தன...

சோகத்தில் தன்னை மூழ்க விட்டுக் கொண்டிருந்த படகோட்டியின் முதுகில் யாரோ தட்டுவது போல் இருந்தது. அவன் உடல் சிலிர்த்தது! சலனமடைந்த அவன் மனத்திரையிலிருந்து நில அன்னை மறைந்தாள். அவள் மறைந்து விட்ட அந்தச் சூன்ய வெளியைப் பார்க்க மனமில்லாமல் திரும்பிய அவன் விழிகளுக்கு அந்த மறையாத பொற்சிலை புன்முறுவல் காட்டி விருந்தளித்தது.

"துடுப்பை இப்படித் தருகிறீர்களா?... நானும் கொஞ்ச நேரம் தள்ளுகிறேன்..."

பால் பொங்கும் நிலவில் முல்லைப்பற்கள் சுடர் வீசின. கனிவு சிந்தும் விழிகளின் பார்வை, அவன் நெஞ்சை ஊடுருவியது. அனல் மூண்ட உள்ளத்தை அணைக்க அந்தப் புன்னகையும் பார்வையும் போதுமே!

"வேண்டாம்; நானே தள்ளுகிறேன்...உன்னால் முடியாது"-

அவன் சிரித்தான். அவர்கள் இருவர் பேச்சையும் கேட்ட மற்றொருவர், "துடுப்பை என்னிடம் தாருங்கள்! களைப்படைந்திருக்கிறீர்கள். நீங்கள் ஒதுங்கி ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லித் துடுப்பை வாங்கிக் கொண்டான்.

படகோட்டி, பின்னால் நகர்ந்தான். 'அவள்' பக்கத்தில் இடம் கொஞ்சமிருந்தது. அங்கே அமர்ந்துகொண்டான்.

நல்ல வேளையாகக் காற்று அப்பொழுது இந்தியக் கரைப் பக்கமாக வீசத் தொடங்கியது. பாய்மரத்தை உயர்த்தினார்கள், நிதானமும் அமைதியும் வியாபித்த நீர் வெளிமீது மிதக்கும் அந்தக் கள்ளத் தோணி, கண்ணுக்கு இனிய காட்சியாயிருந்தாலும் அதனுள்ளே கவலையும் குமுறலும் பெருமூச்சும் நிறைந்து வழிந்தன.

"உங்களுக்குத் தமிழ்நாட்டில் உறவினர்கள் இருக்கிறார்கள்......எதிர்காலத்தைப் பற்றியகவலை நமக்கிருக்காது அல்லவா?" அவள் ஆரம்பித்தாள்.

"உயிரோடு கரையில் கால் வைத்தால் அதைப்பற்றி சிந்திக்கலாம். இப்பொழுது எதற்கு நான் அதைப்பற்றி யோசிக்கவேண்டும்?" — நம்பிக்கை, துளியுமில்லாமல் அவன் பேசினான். அவள் அதைக் கேட்டுச் சிரித்தாள்!

"ஏன் சிரிக்கிறாய்?"

"சிரிக்காமல் வேறென்ன செய்வது? கடலில் மூழ்கிச் சாவதற்காகத்தானா நாம் இவ்வளவு சிரமத்திற்கிடையே பயணம் துவக்கினோம்?"

மீண்டும் நகைத்தாள்! அந்த நகைப்பின் கலகலப்பு ஒலி அடங்கி ஓயும்முன்னால், காற்று சிறிது பலமாக வீசத் தொடங்கியது! வேகமாகமட்டுமல்ல; திசை மாறி வீசியது!...

அதுவரை நிதானத்தோடு நகர்ந்த படகு, நிலைதப்பிக் கவிழ்ந்துவிடத்தக்க அலைக்கழிப்புடன் வேகமாக ஓடியது!... அதை நம்பி வந்தவர்கள் கதிகலங்கித் தவித்தார்கள்! சிங்கள இன வெறியர்களின் கத்தி முனைக்குப் பயந்துவந்த தங்கள் வாழ்வு, கடலில் முடிந்துவிடுமோ என மனம் நொந்து கண்ணீர் வடித்தார்கள்...

* * *

மறுநாள் காலை, அருணோதயத்தில் அந்தத் தோணி இந்தியக்கரை எங்கும் வந்து ஒதுங்கியிருப்பதற்கான அறிகுறிகள் தென்படவில்லை!... ... கலம் கவிழ்ந்ததா?...அதில் வந்தவர்கள் மாண்டார்களா?... உயிர் தப்பினார்களா?...பத்திரிகைகளில் அதுபற்றியசெய்தி ஒன்றுமே வெளியாகவில்லை!...

(2)

வைகறை நேரம். பறவைகள் கூடுகளைவிட்டு இன்னும் வெளிவரவில்லை. பனி மண்டபத்தில் ஊரும், மனிதரும் புதைந்துவிட்டதுபோல் இருந்தது! வாடைக் காற்றுக்கு அஞ்சி, வசதி படைத்தவர்கள் காஷ்மீர் கம்பளியிலும்; வாழ முடியாதவர்கள் கைகளாலும் உடலைப் போர்த்திக்கொண்டு சுருண்டுகிடந்தனர்.

அமைதி சூழ்ந்த அந்த நேரத்தில், ஊர்க்கோடியிலிருந்த பாழடைந்த கோயிலில் இரு குரல்கள் மட்டும் இடைவிட்டு ஒலித்துக்கொண்டிருந்தன...!

"இந்தக் குளிரில் உடல் விரைத்துக் கொண்டால்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை!"

"ஆமாம். வாழ்விலும் நிரந்தர நிம்மதி கிடைத்துவிடும்!" இரண்டாம்குரல் சொல்லிற்று!

அவைகள் பேச்சில் தானும் கலந்துகொள்ள விரும்பியது போல் கோயில் படியில் முடங்கிக்கிடந்த நாய் ஒன்று குரைத்தது!

முதலில் பேசியவன் தலையைத் தூக்கிப் பார்த்தான். கோயில் பக்கமாகச் சென்ற ஒற்றையடிப்பாதையில் யாரோ சிலர் நடந்துகொண்டிருப்பது மங்கலாகத் தெரிந்தது. நாய், இப்பொழுது எழுந்து நின்று பலமாகக் குரைக்கத் தொடங்கியது!

"அவர்களும் நம்மைப்போல் நாடோடிகளோ, என்னவோ" இரண்டாவது பேசிய அந்தப் பெண் சொன்னாள்.

கோயிலை நெருங்கிக்கொண்டிருந்த அவர்களில் ஒருவன் பேசினான்: "இனி என்னால் ஒரு அடிகூட எடுத்துவைக்க முடியாது!"

"அப்படிச் சொல்லக் கூடாது. இரவு முழுமையும் நடந்துவிட்டோம். இன்னும் கொஞ்ச தூரம் நடப்பதற்குத் தயங்கினால் நாம் பட்ட கஷ்டமெல்லாம் வீணாகிவிடும்" ஒரு பெரியவர் சொன்னார்.

"சரி; முடிந்தமட்டும் நடந்து பார்க்கிறேன். முடியாவிட்டால் நீங்கள்தான் தூக்கிக்கொண்டு போகவேண்டும்" என்று சிரித்துக்கொண்டே அவர்களைப் பின் தொடர்ந்தான் அவன்.

அந்தக் கூட்டம், அண்மையில் இருந்த ரயிலடிக்குப் போகிறவர்கள். அந்த ரயிலில் ஏறி சென்னைக்குப் போனால் பிழைக்க வழி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் பசி பட்டினியோடு, இரவு பகலாக நடந்துவருகிறார்கள்!...ஈழ நாட்டிலிருந்து துறத்தப்பட்டு, இங்கே, 'அகதி' என்ற பட்டப பெயருடன் நடமாடுவோரில் இவர்களும் சேர்ந்தவர்கள்...!

அந்தக் கூட்டம் தூரத்தில் மறைந்ததும், கோயிலில் மீண்டும் பேச்சு தொடர்ந்தது. "இந்த ஆகஸ்டு மாதம் வந்தால் சரியாக ஒரு ஆண்டு முடிவடைகிறதல்லவா?"

"ஆமாம். ஏன் அதை இப்பொழுது நினைத்துக்கொண்டாய்?

"இல்லை...இந்தக் கூட்டத்தைப் பார்த்ததும் மறந்துவிட்ட அந்தப் பழைய நினைவுகள் கவனத்திற்கு வருகின்றன" என்றாள் கர்ப்பகம். அந்தப் பழைய நினைவுகள்...

ஒரு நாள் நள்ளிரவில் இலங்கையை விட்டுக் கள்ளத் தோணியில் புறப்பட்டது-இந்தியக் கரையோரம் நெருங்கும் போது பலத்த காற்று வீசி, கலம் கவிழ்ந்தது-அந்த விபத்தில் பலர் மூழ்கி மடிந்தது -வேலனோடு தானும் நீந்திக் கரை சேர்ந்தது - இப்படி நினைவு அலைகள் கர்ப்பகத்தின்

மனக்கடலில் உருண்டு விழுந்தன.

கடல் சுழலில் தப்பி வந்த அவர்கள், பயங்கர வாழ்க்கைச் சுழலில் சிக்கிக்கொள்ள வேண்டி வந்தது!...

உயிர் தப்பிக் கரை சேர்ந்ததும் வேலூருக்குப் புறப்பட்டான் வேலன் அங்கே இருந்த தன் உறவினர்களின் துணையுடன் வாழ்க்கையை துவக்கலாம் என்று நம்பி வந்த அவனுக்குக், கற்பனையிலும் நினைத்துப் பார்க்க முடியாத கொடிய செய்தி ஒன்று காத்திருந்தது!...

'நெய்யும் தொழிலை நம்பி வாழ்ந்திருந்த அந்தக் குடும்பம் கையில் கலயம் ஏந்தி, சென்னை வீதிகளில் பிச்சை எடுத்துக்கொண்டிருக்கிறது' - என்பது தான் அந்தச் சேதி!

அதைக் கேட்டு அவன் நிலை குலைந்து விட்டான்! இனி எங்கே போவது? யாரிடம் தங்குவது? எப்படி வாழ்வது?- எதையும் தீர்மானிக்க முடியாமல் தவித்தது அவன் மனம்!

தன்னைப் பற்றிக் கூட அவன் அவ்வளவு கவலைப்படவில்லை. கர்ப்பகத்தின் நினைவு தான் அவனை வெகுவாக வாட்டியெடுத்தது.

தென் தீவில் - தேயிலைத் தோட்டத்தில், அந்த வண்ண மலரிடம் தன் மனதைப் பறிகொடுத்த 'குற்றத்தை'ச் செய்திருக்கா விட்டால், இன்று வாழ்க்கையைப் பற்றி அவன் இவ்வளவாகக் கவலைப் பட்டிருக்கமாட்டான். அன்று அதைப் பார்த்தபொழுது. தனக்கென்றே அது அரும்பி மலர்ந்து இருப்பதாக நினைத்தான். அந்த மலரும், அவன் வேலை செய்த தோட்டத்தில்- அவனுக்கு மிக அருகாமையில் மணம் பரப்பிக்கொண்டிருந்தது. தனிக் காட்டு மலராக இருந்த அதைப் பறித்துத் தலை தூக்கிக் கொள்ள அவன் நெஞ்சும் விரும்பியது. அவன் விருப்ப மறிந்த பொழுது மலர் சிரித்தது. அதைப் பார்த்து அவனும் சிரித்தபொழுது, மலர் அழுதது!

கர்ப்பகத்தின் காதலுக்கு அவன் ஏங்கி நின்றபொழுது, அவள், தன்னைப் பிரிந்து சென்ற பெற்றோரை நினைந்து கண்ணீர் உகுத்தாள்,

தந்தை, தோட்டத் தொழிலாளரிடை பரவிய மலேரியா சுரத்திற்குப் பலியானார்! தாய் தேயிலை பறிக்கையிலே நாகம் ஒன்று தீண்டிப் பிணமானாள்! அவர்களைத் தவிர, சொந்தம் என்று சொல்லிக் கொள்வதற்குக் கர்ப்பகத்திற்கு வேறு யாருமில்லாமலாகி விட்டது...

தாளமுடியாத இந்த வேதனைகளைச் சொல்லி, அந்த தளிர்க் கொடியாள், அவன் தோள்களில் துவண்டு சாய்ந்தாள்.

வேலன் ஆறுதல் அளித்தான். அந்த மலர்க்கொடியாளுக்கு இனி வாழ்நாள் முடியுமளவும் தான் கொழுகொம்பாய் இருப்பதாக உறுதி தந்தான். அவள், அவன் துணைவியானாள்...

அவளுக்கு அன்று அவனளித்த உறுதியை எப்படி இனி காப்பாற்றுவது? வேலன் குழம்பினான்.

(3)

அந்தி வானத்தின் மஞ்சள் கிரணங்கள் சுருங்கி மங்கிக் கொண்டிருந்தன. இருளுக்கு முன் கூடுகளைச் சென்றடையும் ஆவலில் பறவைகள் சிறகடித்துப் பறந்தன. உழவர்கள் கலப்பை தாங்கி, மாடுகளை முன் செல்லவிட்டுப் பின் தொடர்ந்துகொண்டிருந்தனர்.

அந்தப் பாழடைந்தகோயிலையொட்டியிருந்த ஒற்றையடிப் பாதையில் ஒரு உழவன், வேதனை தொனிக்கும் குரலில் தன் தோழனிடம் பேசினான்.

"நாளை முதல் எங்களுக்கு வயலில் வேலை கிடையாதாம்!" என்று சொல்லிப் பெருமூச்செறிந்த அவனுக்கு அந்தக் கோவில் பார்வையில் பட்டது. அது, பழைய நினைவொன்றை அவன் மனதில் தூண்டிவிட்டது.

"போன வருடம் இங்கே இரண்டுபேர் அடிக்கடி வந்து தங்குவார்களே, நீ கவனித்திருக்கிறாயா?" என்றான் உழவன்.

"ஆமாம். ஒரு ஆணும், பெண்ணும்; இப்பொழுது எங்கே அவர்கள்?"

"எங்கே இருக்கிறார்களோ, என்ன ஆனார்களோ தெரியவில்லை. பாவம்! பசி பட்டினியாகக் கிடந்து படாத பாடு பட்டார்கள். வயல்களில் வேலை கிடைக்கும் என்று எங்கெல்லாமோ அலைந்து பார்த்தார்கள். கடைசியாக ஒருநாள் இங்கிருந்து புறப்பட்டவர்கள் தான்...பிறகு திரும்பவேயில்லை."

ஆம்; திரும்பவில்லை! அன்று இங்கிருந்து புறப்பட்டார்கள்! இன்று, நாட்டைவிட்டே புறப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்!!...

வேலூரில் உறவினர் இல்லையென்று கேள்விப்பட்டபிறகு, வேலனும் கர்ப்பகமும் வயல்களை நம்பிப் புறப்பட்டார்கள். தேயிலைத்தோட்டத்தில் வேலை செய்த அனுபவமும், உழைக்கும் திறனும் அவர்களை வயல்கள் பக்கம் திருப்பிவிட்டது. ஆனால்?

பரம்பரையாக வேலை பார்த்துவரும் உழவர்களையே, நிலப் பிரபுக்கள் வெளியேற்றிக் கொண்டிருக்கும் காட்சியை அவர்கள் சென்ற இடங்களில் பார்த்துத் திகைத்தார்கள்! இந்தப் பாழடைந்த கோவிலைத் தங்குமிடமாகக்கொண்டு பல வெளிக் கிராமங்களிலும் சுற்றிப் பார்த்துவிட்டு, முடிவாக, சென்னைக்குப் புறப்பட்டார்கள்!

நம்பி வந்த சென்னையும் அவர்களைக் கைதூக்கி விடவில்லை!

சென்னையில் அவர்கள் வைத்திருந்த கடைசி நம்பிக்கையும் சிதைந்து விட்டது!... இனி எங்கே செல்வது?...

பல நாட்களாகச் சிந்தித்தார்கள். அதன் விளைவு!

அதோ!...அந்த இருள் வெள்ளத்தில், அந்த உருவங்கள்...

இருளில், கள்ளத் தோணியில் வந்தார்கள், அன்று. ஒரு முழு ஆண்டு உருண்டு விட்டது. அதோ ... மீண்டும் கள்ளத் தோணி காத்திருக்கிறது அவர்களுக்காக! 'இனி இறந்தாலும் வாழ்ந்த இடத்திலேயே இறக்கணும்' என்ற முடிவுடன் போகிறார்கள்!

வேலனும் கர்ப்பகமும் முன்பு புறப்பட்டு வந்த அதே ஆக்ஸ்ட் மாதம் திரும்பவும் இன்று வந்திருக்கிறது; அதே திங்கள்-அதே தேதி-அதே நள்ளிரவில்-இதோ!... அவர்கள் ஏறிய கள்ளத்தோ[ணி] கரையகன்று செல்கிறது...

போகிறார்கள்...!...அருமை[த்] தாயகம் வாழ்வளிக்கும் [என்று] வந்தவர்கள் போகிறார்கள்!

'கடாரம் வென்றானும்' 'கங்கைகொண்டானும்' [ஆ]சோச்சிய பழம்பெரும் நாட்[டின்] குறியவர்கள் போகிறார்கள்!

ரோமும் யவனமும் பெரு[மை] பேசிப் புகழ்பாடிய நாகரி[கத்]தின் சொந்தக்காரர்கள். போ[கி]றார்கள்!

குறள் பாடிச் சிலம்பொலி[க்]கும் சிங்காரத் தமிழணங்கி[ன்] சந்ததியார் போகிறார்கள்!

அதோ...அந்தக் காதல் [ஓ]யங்கள். அவைகள் வாய்வி[ட்டு] ஒன்றும் பேசவில்லை. அ[வ]ரின் விழிகளில் சுரக்கும் [நீர்] முத்துக்கள் ஒன்றுடன் ஒன்[று] பேசிக்கொள்கின்றன...

மோன இருள் வெளியி[ல்] கலந்து மறைந்துகொண்டிரு[க்]கும் அந்த கள்ளத் தோ[ணி]யின் இறுதிக்காட்சி, அதோ[...] தெரிகிறது...!

மணவழகர் மன்றம்

பெத்துநாயக்கன்பேட்டை . சென்னை-1.

[துவக்கம் 1957]

—(0)—

திருக்குறள் வகுப்பு

—(0)—

மேற்படி மன்றத்தின் சார்பில் பெத்துநாயக்கன் பேட்டை, முருகேச முதலித் தெரு, 2ஆம் எண்ணுள்ள கட்டடத்தில் ஒவ்வொரு புதன்கிழமை மாலை 6-30 மணிக்குத் "திறக்குறள் வகுப்பு" புலவர் கா. சி. தனக்கோட்டி (தமிழ் ஆசிரியர், தொண்டை மண்டலம், உயர்நிலைப் பள்ளி, சென்னை) அவர்களால் நடத்தப்படும். அனைவரும் வந்து பயனடையுமாறு வேண்டுகிறோம்.

பெண்களுக்குத் தனி இடம் உண்டு. அனைவரும் திரண்டு வருக.

இங்ஙனம்,

மணவழகர் மன்றத்தினர்.

ஒவ்வொரு சனிக்கிழமை மாலை 6-30 மணிக்குக் கூடும் நக்கீரர் பட்டி மன்ற-விவாதத்தில் கலந்துகொள்ளுங்கள்.

ஏழைச் சிறுவர் சிறுமியர் நலனுக்காக டாக்டர் சி. நடேசனார் இரவு பாடசாலை தினம் மாலை 6-30 மணி முதல் 8.15 மணிவரை நடைபெறுகிறது.

திரு. வி. க. நூல் நிலையத்தைப் பயன்படுத்துங்கள்.

பெத்துநாயக்கன்பேட்டை மாணவிகளின் நலனுக்காக விரைவில் டாக்டர் எஸ். தருமாம்பாள் பெண்கள் உயர்நிலைப் பள்ளி தொடங்கப்படும்.

அழைப்பு!

(ர வி)

★

கலையோடு நிலையாகிக்
கனிவாகும் இயலே!
விலையேது சுவைசேர்க்கும்
இனிதாகும் இசைக்கே?

அறஞ்சேர்க்கும் அறிவாகி
அறியாமை யழித்தே
கருத்தோடு பிணைந்தாடிக்
களிப்பூட்டும் தமிழே!

அகமோடு புறம்மேவ
குறள்சாரும் மொழியே
இகல்வாழ்வின் உயிர்காக்கும்
மருந்தாகும் அறிவாய்!

உணர்வாகும் தமிழேஉன்
உயிராகும் தமிழா!
பிணமாவாய் அமிழ்தாம் உன்
மொழிதானும் அழிந்தால்!

கொடிதாகும் வடநாட்டின்
அடிநாடி இணைந்தால்
பொடியாகும் தமிழே! கன்
மணலாகும் வளமே!

புலியாகிப் புவிமீது
புகழோடு வாழ்ந்தோர்
எலியாகி உயிர்வாழ
நினைத்தோடல் முறையோ?

மலையாகும் தமிழேஉன்
நிலைவீழக் குலைப்போர்
தலைவேறும் உடல்வேறும்
அறுத்தேஇங் கெறிப்போம்!

புலியாவும் எதிர்தோன்றி
தமிழ்த்தாயை அழித்தால்
கலியாவும் புயலாகப்
புவியேஇங் கொழிப்போம்!

நெருப்பாக எரிவாய்உன்
திருமாது தமிழை
ஒறுத்தேக வருவார்தம்
உயிர்வீழக் கிழிப்போம்!

தலையாய மலைமேரு
தமிழ்நீக்க முனைந்தால்
விலையாக உயிரீந்தும்
மணலாக உதிர்ப்போம்

மறத்தோளும் நெடுவாளும்
துயில்நீக்கி எழுவீர்
இறந்தாலும் இழந்தாலும்
தமிழோடு பிணைவோம்!

அலையாகத் தமிழாஉன்
அணிமேவ வருவாய்
தலையாய தமிழ்காக்கக்
கொலைவாளை எடுப்பாய்!

அடலேறு நிகர் வாழ்வின்
வரலாறும் அறிந்தே
திடமான மனத்தோடு
உயிரீய விரைவாய்!

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அயல்நாட்டுப் பணத்தை வரவழைக்க டி. டி. கிருஷ்ணமாச்சாரி பேரம் பேசியுள்ளார்! வடநாட்டில் நிறைவேற்றப்படப் போகும் சிலப் பெரும் திட்டங்களுக்கு, இந்திய உபகண்டத்திலுள்ள எல்லா மக்களின் வாழ்வையும் அந்நியரின் கடன் சுமையால் அழுத்திவைக்கப் போகிறார்!

இங்குள்ள மக்களைச் சமாதானப்படுத்தவும், அவர்களுக்கு ஒரு நம்பிக்கையைத் தரவும், சமதர்மத்தைப்பற்றி காங்கிரசுத் தலைவர்கள் பேசுகிறார்கள். ஆனால் வெளிநாட்டு முதலாளிகளிடம் "அதெல்லாம் ஒன்றும் கிடையாது!" என்று மறுத்துவிடுகிறார்கள்!

இரண்டு வாரங்களுக்கு முன்னதாகக்கூட, என். வி. காட்கில் என்பவர் "செசவு ஆலைகள் அனைத்தையும் தேசியமாக்குவதுடன், சர்க்கரை ஏற்றுமதி உரிமை முழுவதையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனக் கூறினார். என். வி. காட்கில் முன்பு மத்திய அரசாங்கத்தில் ஒரு மந்திரியாக இருந்தவர், இப்பொழுது இந்திய அரசாங்கப் பாங்கியின் உதவித் தலைவராக இருப்பவர். காங்கிரசுக் கட்சியில் முக்கியமானவரும், பொறுப்பு வாய்ந்த பதவியிலிருப்பவருமான அவர், துணி ஆலைகள் தேசியமயமாக்கப் படவேண்டுமெனக் கூறுகிறார். அவர் சொல்லிய நாலைந்து நாட்களுக்குள், "இனிமேல் எந்தத் தொழிலும் தேசியமாக்கப்படமாட்டாது" என நிதிமந்திரி அறிவிக்கிறார்.

ஒருவர் இந்தியாவில் பேசுகிறார். இன்னொருவர் அமெரிக்காவில் பேசுகிறார். நிலைமைக் கேற்றபடி பேச்சு மாறிவிட்டதோ, அல்லது இங்கு சொல்லமுடியாத உள் எண்ணத்தை அங்கு தெரிவித்துவிட்டாரோ, தெரியவில்லை!

சமதர்மக் கொள்கையென்றால், உற்பத்தி முறைகள் தனிப்பட்டவர்களின் ஆதிக்கத்தில் இல்லாமல் பொதுவாக வைக்கப்படுவது என்பது அதன் முக்கிய திட்டங்களில் ஒன்று. ஆனால் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் இதை மறுத்துப் பேசியுள்ளார். தனிப்பட்ட முறையில் அவருக்குச் சமதர்மத் திட்டம் பிடிக்காது என்பது தெரியும். ஆனால் அமெரிக்காவில் அவர் பேசியது தனிப்பட்ட முறையிலல்ல, இந்திய அரசாங்கத்தின் சார்பாக! அவர் அதிகாரபூர்வமாகக் கூறுவது இந்திய அரசாங்கத்தின் கொள்கையாகிறது!

நிதிமந்திரி கிருஷ்ணமாச்சாரியார் இந்தியாவின் சமதர்மத் திட்டத்தை மறுப்பதுமட்டுமல்ல, பொதுவாக உள்ள சமதர்மக் கொள்கையை ஏளனம் செய்வதுபோல் வேறு பேசியிருக்கிறார்: "பலவகைகளில் பார்த்தால், அமெரிக்க ஐக்கிய நாடுகள் சமதர்ம நாடாக இருக்கிறது."

இந்தியாவில் மன்னர்களையும் மகாராணிகளையும் ராஜாசர்களையும் ஜமின்தாரர்களையும் மில் முதலாளிகளையும் மிட்டா மிராசுகளையும் உவந்து ஒருபுறத்தில் அணைத்துக்கொள்ளுகிற காங்கிரசு கட்சி சமதர்மத்தைப் பற்றிப் பேசுகிறபொழுது, நிதிமந்திரி பார்ப்பதெல்லாம் சமதர்ம மயமாகத் தெரிகிறது. கண்களுக்கு, பிர்லா டாட்டாக்கள் மட்டுமல்ல, அமெரிக்க நாடே ஒரு சமதர்ம அடிப்படையை ஏற்றுக்கொண்டவற்றில் ஒன்றாகத் தோன்றுகிறது!

இந்தியாவைச் சமதர்மத்திலிருந்து, அமெரிக்காவைச் சமதர்ம நாடாக ஆக்கி, இவ்வளவு பாடுகள் படுகிறாரே, இவர் எதிர்பார்த்துச் சென்ற கடன் தொகை கிடைத்துவிட்டதா என்றால், அதுதான் நமக்குத் தெரியவில்லை. நமக்கு மட்டுமல்ல. கடன் கேட்கப்போன டி. டி. கிருஷ்ணமாச்சாரியாருக்கே தெரியவில்லை. "எவ்வளவு கடன் கொடுப்பதாகச் சொன்னார்கள்?" என்று பத்திரிக்கை நிருபர்கள் கேட்டபொழுது, "ஒன்றும் திட்டவட்டமாகச் சொல்லவில்லை, நானும் கேட்கவில்லை. ஆனால் எவ்வளவு தேவையென்று சொன்னேன். அது அவர்கள் மிக ஆதரவுடன் கேட்டுக்கொண்டார்கள், என்று டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் சொல்லியுள்ளார்.

இந்தியாவுக்குத் தேவை என்று நிதிமந்திரி குறிப்பிட்ட தொகை, 140 கோடி டாலர் (665 கோடி ரூபாய்)! இதில் அமெரிக்க அரசாங்கமோ, அமெரிக்க முதலாளிகளோ எவ்வளவு தருவார்கள் என்று தெரியவில்லை.

வடநாட்டை வளப்படுத்தப் போடப்பட்டுள்ள ஐந்தாண்டுத் திட்டத்தை எப்பாடு பட்டேனும், நிறைவேற்றிவிட டில்லி ஆதிக்கம் துடிக்கிறது. அதனால், தமது சமதர்மப் போர்வையை விட்டெறிந்தேனும், அயல்நாடுகள் போடும் விதிகளை ஒப்புக்கொண்டேனும், நிதி நிலைமையைச் சீர்படுத்தி, பெரியதும் முக்கியமுமான வடநாட்டு திட்டங்களை மட்டும் நிறைவேற்ற டில்லி ஆட்சி முடிவெடுத்துள்ளது! அதற்கு உதவியாக டி. டி. கே. காவடி தூக்கி, அமெரிக்கா சென்றார்! அவரே இந்த நாட்டுப் பொருளாதாரத்துக்கு ஒரு ஆபத்தாக இருக்கிறார், இனிமேல் அவர் என்னென்ன புது ஆபத்துக்களைக் கொண்டு வரப்போகிறாரோ தெரியவில்லை! 0

மன்றம் வார இதழின் சந்தா விபரம்

உள்நாடு (இலங்கையும் சேர்த்து)

இரண்டாண்டு	...	ரூ.	15.00
ஓராண்டு	...	ரூ.	8.00
ஆறுமாதம்	...	ரூ.	4.00
தனி இதழ்	...		16 காசு

இலங்கை சந்தாதாரர்களுக்கு வி. பி. பியில் தனிச் செலவு 75 காசு.

வெளிநாடு (மலேயா-பர்மா)

இரண்டாண்டு	...	ரூ.	18.75
ஓராண்டு	...	ரூ.	10.00

(ஓராண்டிற்கு குறைந்த சந்தா இல்லை)

தனி இதழ்	...		20 காசு

காலையில் குருகுலம், மாலையில் தொழில் கல்லூரி!

——(0)——

கல்வித்துறையில் அரசாங்கத்தின் குழப்பம்.

——(0)——

இந்திய தேசியத் தலைவர்களுக்கு இரண்டுவிதமான மனப்போக்குகள் இருக்கின்றன. தேசியம், பாரதம், பழம்பெருமை இவைகளைப்பற்றி நினைக்கும்பொழுது பழங்காலத்திலிருந்த முறைகளில் இருக்க வேண்டுமென நினைக்கிறார்கள். ஆனால் அயல்நாடுகளையும், அயல்நாடுகளில் ஏற்பட்டுள்ள அபரிமிதமான தொழில்வளர்ச்சிகளையும் பார்க்கும்பொழுது நமது நாட்டிலும் பெரும் தொழிற்சாலைகள் ஏற்பட வேண்டுமென விரும்புகிறார்கள்.

ஒருபுறத்தில் கிராமியத் தொழில்கள்போல் கூடை முடையும் கட்டும் வேலைகளே இந்தியாவுக்கு ஏற்றவை என்று நினைக்கிறார்கள், மற்றொருபுறம் மற்ற நாடுகளைப்போல நமக்கு ஒரு அணுச்சக்தி உற்பத்திசாலை இருக்கவேண்டும் எனத் தோன்றுகிறது!

"வேத ஆகம காலத்திற்குத் திரும்பிப் போய்விடவேண்டும், அதுதான் பாரதத்தின் பொன்னான காலம்!" என பழம் பெருமைகளைப் பேசும்பொழுது சொல்கிறார்கள். ஆனால் அணுச்சக்தி காலம் சுற்றிலும் சூழ்ந்திருக்கும்பொழுது மற்றவர்கள் நம்மைப் பார்த்து மதிக்கும் அளவுக்கு முன்னேற வேண்டுமென்ற அவசியமும் தோன்றுகிறது.

அடிப்படை மனப்போக்கிலேயே சிக்கலும் குழப்பமும் உண்டாகிவிடுகின்றன. இந்தக் குழப்பம் மற்ற எந்தத் துறையிலும் இருப்பதைவிட, கல்வித் துறையில் அதிகமாக இருப்பதைக் காணலாம்.

ஆதாரக்கல்வி வேண்டும்—ஒருபுறம் கல்வி மாநாடுகள் நடக்கின்றன, திட்டங்கள் போடுகிறார்கள்! தொழில் நிபுணர்கள், விஞ்ஞானிகள்தேவை—உயர்தரத் தொழிற்கல்வி வேண்டும்—மற்றொரு புறம் பெரிய ஆராய்ச்சிச்சாலைகள் கட்டப்படுகின்றன.

எது வேண்டும்? ஆதாரக் கல்வியா? விஞ்ஞானக் கல்வியா? இதில் இந்திய அரசாங்கத்தினருக்கு இன்னும் தெளிவு உண்டாகவில்லை.

இந்தியக் குடியரசுத் தலைவராக விளங்கும் பாபு ராசேந்திர பிரசாத் அவர்களுக்கு இந்தக் குழப்பமான நிலை அண்மையில் ஏற்பட்டது.

செப்டம்பர் 30ஆம் தேதி காலை பரோடாவில் ஒரு வித்யாலய வெள்ளிவிழாக் கூட்டத்திற்கு ராசேந்திர பிரசாத் தலைமை வகித்தார். அந்த வித்யாலயம் பழமை முறைகளில் பழக்கங்கொண்ட இடம்போலும். அந்த இடத்தில் குடியரசுத் தலைவர் பேசும்பொழுது "இப்பொழுது இருக்கும் பல்கலைக் கழகங்களும் புதிய கல்லூரிகளும் பழைய காலத்திய குருகுலம், பாடசாலை இவைகளுக்கு ஈடாக இருக்குமா என்பது சந்தேகமே!" என்று பேசினார்.

பாபு ராசேந்திரபிரசாதின் கருத்துப்படி பழங்காலத்திய குருகுலவாசம், பாடசாலை படிப்பு இவைகள் தாம் பலன் தரத்தக்கவை. இப்பொழுதுள்ள பல்கலைக்கழகம், தொழில் கல்லூரிகள் எல்லாம் அதற்கு ஈடாக முடியாது. ஆக இவைகளைவிட்டு, பழைய முறைப்படி குருகுலங்களையும் பாடசாலைகளையும் ஏற்படுத்தவேண்டும்,

செப்டம்பர் 30ஆம் தேதி காலையில் குடியரசுத் தலைவர் பழைய குருகுலங்களைப்பற்றி, இப்படிப் பேசிவிட்டார்! அதே நாள் மற்றொரு விழாவுக்கு அவர் செல்லவேண்டியிருந்தது. அது என்னவென்றால், பரோடா பல்கலைக்கழகத்தின் தொழிற்கல்லூரியின் கட்டடத்துக்குக் கால்கோள் விழா! பல்வகைப்பொறியியல், தொழிலியல் பகுதிகளை உடைய கல்லூரி அது. அந்தக் கல்லூரிக்கு, புதிய மேல்நாட்டு முறையில் வசதிகள் அமையப்பெற்ற புதிய கட்டிடத்துக்கு ஆகப்போகும் செலவு 26 லட்சரூபாய்!

காலையில் இராசேந்திர பிரசாத் பேசியது குருகுல வாரத்தை—மரத்தடியில் அமர்ந்து கல்வி கற்கும் முறையை!

அறிஞர் அண்ணா:

அறிஞரும் கலைவாணரும் (4)

அறிஞர் அண்ணா அவர்களைச் சந்தித்துத் தொடர்பு கொண்டதிலிருந்து, கலைவாணர் என். எஸ். கருஷ்ணன் அவர்களுக்கு அரசியல் கட்சிகளுடன் நேரிடையான தொடர்பும், அக்கரையும் உண்டானது என்று கூறலாம். நீண்ட நாட்களாகவே சுயமரியாதை இயக்க ஏடுகளையும், அதற்குப் பின் திராவிட கழக ஏடுகளையும் அவர் தொடர்ச்சியாகப் படித்திருக்கிறார். அண்ணாவைச் சந்திப்பதற்கு முன்பே "திராவிடநாடு' பத்திரிக்கையை ஆரம்பத்திலிருந்து அவர் தொடர்ந்து படித்து வந்திருக்கிறார். நாடகமேடையில் அதற்குமுன் மற்றெவருக்குமில்லாத அளவுக்கு, கலைவாணர் பகுத்தறிவுக் கொள்கைகளைத் தெளிவாக அறிந்திருந்தார். அறிந்தது மட்டுமல்லாமல், விடாப்பிடியாக தனது கொள்கையைக் கலைத் துறையில் பரப்பவும் அவர் பாடுபட்டார். புராணப் படங்கள் சூழ்ந்திருந்த சமயத்தில் தன்னந்தனியாக அவர் ஒருவர் மட்டும், குருட்டு நம்பிக்கைகளுக்கு எதிராக இருந்தார். பழமைக் கருத்துக்களை எதிர்ப்பதில், அண்ணாவும் கலைவாணரும் ஒரேவிதமான முறையைக் கையாண்டார்கள் என்று கூறலாம். கேலி கிண்டல், முரண்பாட்டை எடுத்துக் காட்டி நகைப்பிற்கு இடமாக்குதல்-இவைதாம் இருவரின் போக்காக இருந்ததைக் காணலாம். பயத்தைத் தந்து கொண்டிருந்த பல நம்பிக்கைகளைச் சிரிப்பிற்கு இலக்காக்குவதன் மூலம், அந்தப் பயத்தைப் போக்க முடிந்தது. அறிஞர் அண்ணாவின் பேச்சில், தெளிவும் கருத்தாழமும் புன்னகையும் புதுமையும் கவர்ச்சியைத் தந்தன. அதே போன்ற பண்பாடுகள் கலைவாணரின் நடிப்புக் கலையில் இருந்ததைக் காணலாம். கடுமையான இன்னல்கள் வந்த போதும், அமைதியுடன் புன்னகையுடன் தாங்கிக்கொள்ளும் பண்பு இருவருக்கும் இருந்து வந்தது. அதிலும் கலைவாணர் அவர்கள் "இடுக்கண் வருங்கால் நகுக!" என்ற குறளடியை அடிக்கடிச் சொல்வார். அது வெறும் வேடிக்கை மட்டுமல்ல, வாழ்க்கையில் வேதனைப் பகுதிகள் வந்தபோதும் கலைவாணர் அதன்படி இருந்திருக்கிறார்.

சிறைச்சாலையில் அவரும் பாகவதரும் அடைக்கப்பட்டபொழுது, முதலில் பெரும் அதிர்ச்சி உண்டானபோதிலும் இரண்டொரு நாட்களில் சமாளித்துக்கொண்டு கலைவாணர் சிரித்துப்பேசத் துவங்கிவிட்டாராம். "இதுவரை சும்மா பாட்டுப்பாடிக் கொண்டிருந்தேன், இனிமேல் முறையாகச் சங்கீதம் கற்றுக்கொள்ளப்போகிறேன்!" என்று பாகவதருடன் இவர் சங்கீதம் கற்றுக்கொள்ள ஆரம்பித்தார். அந்த வகையில், முயற்சியோடிருந்து, பல இராகங்களை அவர் கற்றுக்கொண்டார். சிறைச்சாலையில் ஒரு நாள் நடைபெற்ற விழாவில் கலைவாணர் பாட்டுக்கச்சேரி நடத்த, அதற்கு மாலைகள் போட்டார்கள். அந்த மாலையைப் பத்திரமாக வைத்திருந்து, பார்க்க வந்தவர்களிடம் கொடுத்து அறிஞர் அண்ணாவிடம் காட்டச் செய்தார். அப்பொழுது ஒரு சமயம் என். எஸ். கே. வீட்டுக்கு அண்ணா சென்ற பொழுது, அந்த மாலையை எடுத்து வந்து காட்டினார்கள்!

சிறைச்சாலையை விட்டு வெளிவந்ததும், பாகவதர் கூட "அண்ணா! இப்பொழுது கிருஷ்ணன் பல இராகங்களைக் கற்றுக்கொண்டு வந்திருக்கிறார்!" என்று கூறினார். "எது இருந்தாலும் இல்லாவிட்டாலும், சங்கீதந்தான் ஒருவனுக்கு நல்ல சிநேகிதன்" என்று கலைவாணர் கூறுவதுண்டு!

கழகம் நடத்திய மும்முனைப் போராட்டத்தின் போது அறிஞர் அண்ணாவும் மற்றவர்களும் சிறைப்படுத்தப் பட்டபொழுது, கலைவாணர் அவர்களைச் சந்திக்கச் சிறைக்கு வந்திருந்தார். அண்ணாவையும் மற்றவர்களையும் கண்டு பேசிக்கொண்டிருக்கும் பொழுது, கலைவாணர் பேச்சை நிறுத்தி சுற்றிலும் பார்த்தார்.

ஜெயிலர் "என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

"பாடலாமா?" என்று கலைவாணர் கேட்டார்.

ஜெயிலர் சிரித்துக்கொண்டு தலையசைத்தார். உடனே கலைவாணர் தாம் நடித்துக் கொண்டிருந்த படங்களில் புதிதாகப் போடப்பட்ட பாடல்களைப் பாடிக் காட்டினார்! அண்ணா அவர்களைப் பார்க்கும் பொழுதெல்லாம், புதிய பாடல்களிருந்தால் பாடிக்காட்டுவது வழக்கம். அந்த வகையில் அதை அங்கும் செய்தார்! பாடல்கள் முடிந்ததும், அண்ணாவிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு கலைவாணர் திரும்பினார்!

(வா)னொலியில் ஏகாதிபத்தியக் குரல்!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

...ட்டபடி இருந்தனர், சென்...யில் உள்ள ஒலிபரப்பும் ...தி பலப்படுத்தப்பட்டால், ...து தென்னாட்டு நான்கு ...மாழிகளையும் வெளிநாடுக...க்கு ஒலிபரப்ப உதவியாக ...ருந்திருக்கும். அந்த வகை...ல் பலர் சென்னைக்குப் பல...ன ஒலிபரப்பும் சக்தி தர ...வண்டுமெனக் கேட்டார்கள்.

...டில்லி அரசாங்கம் இந்த ...வண்டுகோள்களைபரிசீலித்து, ...டசியாக சென்னையில்அதிக ...்திவாய்ந்த ஒலிபரப்பும் சாத...த்தை வைப்பதென முடிவு ...சய்தது. இதுவரை இருந்து ...ந்த ரேடியோ நிலையத்தின் ...லு 20 கிலோ வாட் என்றால், ...திதாக வைக்கப்பட்டுள்ள ...லிபரப்பும் சாதனத்தின் சக்தி ...0 கிலோ வாட்! முன்பிருந்...தைவிட ஐந்துமடங்கு அதிக ...லுவுள்ள ஒலிபரப்பும் கருவி ...சன்னையில் வைக்கப்பட்டது!

இதைக் கேட்டால், தென்...ட்டில் உள்ளவர்கள் குதூகலப்படவேண்டும். ஆனால் டில்லி ஆதிக்கம் அத்தகைய குதூகலத்துக்கு இடம் வைக்கவில்லை. புதிதாக வைக்கப் படப்போகும் 100 கிலோ வாட் சக்தியுள்ள ஒலிபரப்பும் சாதனத்தின்மூலம் என்னென்ன ஒலிபரப்பப்படவேண்டும் என்பதையும் டில்லி தலைமைப்பீடம் எழுதி அனுப்பிவிட்டது!

டில்லியிலுள்ள தலைமைப் பீடம் குறித்துத் தந்துள்ள நிகழ்ச்சி வரிசைகள் கீழே தரப் பட்டுள்ளன. இது இனிமேல் நாள்தோறும் சென்னை ரேடியோ நிலையத்திலிருந்து ஒலிபரப்பப்படும்:—

பகல்	11—00	ஜரோகா
	11—05	ஜங்கார்
	11—15	ஸ்வர் சங்கம்
	11—40	சித்ர சாலா
	11—45	மனோரஞ்சன்
	12—00	ஒலிபரப்பு முடிவு.
மாலை	5—30	மதுவன்
	6—00	தார்ஹார்
	6—30	பத்ராவலி
	6—35	கஜரா
	7—00	மன் சஹே கீத்
	7—45	ரத்னகர்
	8—00	சங்கீதிகா
	8—15	மஞ்ஜுஷா
	8—35	ஜானே பஹே ஸானே
	8—55	ஜரோகா
	9—00	பிர் ஏக் பார்
	9—15	பாரத் வாணி
	9—30	ஒலிபரப்பு முடிவு.

படிக்கும்பொழுது ஏதோ பையன்களின் பெயர்கள் போலிருக்கிறது என்று தோன்றும். இவைகள்தாம் "விவித பாரதி" என்ற புதிய ஒலிபரப்பில் தரப்படப்போகும் நிகழ்ச்சிகள்!

பெயர்களைப் பார்க்கும் பொழுதே அந்த நிகழ்ச்சிகள் எந்த மொழியில் இருக்கும் என்பதைப் புரிந்து கொண்டிருக்கலாம். கடைசிப் பதினைந்து நிமிடம் தவிர இந்த ஒலிபரப்பு முழுவதும் இந்தியில் இருக்கப்போகிறது!

"விவித பாரதி" பெயரே இந்தி! அதன்கீழ் நடைபெறும் நிகழ்ச்சி வரிசைகளின் பெயர்கள் இந்தி! தரப்படப்போகும் செய்திகள், பாடல்கள் பேச்சுகள், நாடகங்கள், கதைகள் எல்லாம் இந்தியில்!

சென்னை, பம்பாய் ஆகிய இடங்களில் வைக்கப்பட்டுள்ள இரண்டு புது நிலையங்களும் ஒரே விதத்தில் இந்த நிகழ்ச்சிகளை ஒலிபரப்பும்! "விவித பாரதி"யின் தலைமை நிலையம் பம்பாயில் வைக்கப்பட்டுள்ளது. பம்பாயில் எல்லாவற்றையும் தேர்ந்தெடுத்து, ஒழுங்கு படுத்தி, பதிவு செய்து அனுப்புவார்கள். சென்னையில் இருப்பவர்கள் அவற்றை அப்படியே ஒலிபரப்பு செய்வார்கள்! இங்கே இருப்பவர்களுக்குக் கிராமபோன் பெட்டி வேலை!

நாள்தோறும் நடைபெறும் இந்த கதம்ப நிகழ்ச்சிகளில் கடைசியாக ஒலிபரப்பு முடியும் பொழுது இரவு 9-15 முதல் 9-30 வரை பாரத் வாணி என்ற தலைப்பில் பிரதேச மொழிகளுக்காக இடம் ஒதுக்குகிறார்களாம். "விவித பாரதி"யில் இந்தப் பதினைந்து நிமிடம் தவிர மற்ற எல்லா நேரமும் இந்தியிலேயே இருக்கும். இந்தப் பதினைந்து நிமிடத்தில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பிரதேச மொழிக்கும் இடம் தரப்படுமாம். இந்தியாவில் முக்கிய பிரதேச மொழிகளாக ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளவை 14 மொழிகள். ஒரு நாள் "விவித பாரதி"யில் தமிழுக்குப் பதினைந்து நிமிடங்கள் தரப்பட்டால், இரண்டாவது நாள் தெலுங்குக்கு, மூன்றுவது நாள் மலையாளத்துக்கு, நான்காவது நாள் கன்னடத்துக்கு, ஐந்தாவது நாள் வங்காளத்துக்கு; இப்படி இந்தி தவிர்த்த எல்லா பிரதேச மொழிகளுக்கும் ஒவ்வொரு நாள் பதினைந்து நிமிடம் தந்து, பதின்மூன்று நாட்களுக்குப் பின் மீண்டும் தமிழுக்கு பதினைந்து நிமிடங்களுக்கு இடம் கிடைக்கும்.

"விவித பாரதி" நிகழ்ச்சியில், தமிழுக்கு மாதத்தில் இரண்டு தடவை பதினைந்து நிமிடம், பதினைந்து நிமிடம் இடம் கிடைக்கும். ஆனால் இந்திக்கு நாள்தோறும், கடைசிப் பதினைந்து நிமிடம் போக மற்ற எல்லா நேரமும் இடம் தரப்படுகிறது.

"விவித பாரதி" நிகழ்ச்சியில் தமிழ் 15 நிமிடம் ஒலி பரப்பப் பட்டால், இந்தி 3705 நிமிடங்கள் ஒலிபரப்பப்படும்!

"விவித பாரதி" தமிழர்க்கும் தென்னாட்டு மக்களுக்கும் பொதுவாக இந்தியல்லாத மற்ற மொழியினருக்கு-"வேதனைப் பகுதி"யாக ஆகப்போகிறது.

இப்பொழுதுள்ள சென்னை ஒலிபரப்புகளிலேயே, இந்தியில் செய்தி, இந்திப் பாடம், டெல்லி ஒலிபரப்பு என்று புகுத்தப்படுகிறது. புதிதாக வைக்கப்படும் அமைப்பில் இந்திக்கு முழு இடம் தரப்பட்டு விட்டது. வாங்கப்படும் வரிப் பணம் எல்லா மொழியினரிடமிருந்து, ரேடியோ வைத்திருக்கிற எல்லாப் பகுதியினரிடமிருந்து! ஆனால் இந்திக்கு மட்டும் பெரும்பாலான நேரத்தைத் தருவதாக-இந்தியின் ஆதிக்க வெறிக்கு உதவி புரிவதாக அகில இந்திய ரேடியோ அமைப்பின் போக்கு இருக்கிறது.

நேர்மையுடனும் நீதியுடனும் நடைபெற வேண்டுமென்றால், சென்னையில் அமைக்கப்பட்ட புதிய ஒலிபரப்பைத் தென்னாட்டு மொழிகளுக்கும், பம்பாயில் அமைக்கப்பட்ட புது ஒலிபரப்பை வட நாட்டு மொழிகளுக்கும் தந்திருக்கலாம். ஆனால் அகில இந்திய ரேடியோ, இரண்டு புது அமைப்புகளையும் இந்தி மொழியைப் பரப்பத் தந்து விட்டது!

அகில இந்திய ரேடியோ என்பது அகில. இந்தி ரேடியோவாக இருக்கிறது!

அகில இந்திய ரேடியோ (ஆல் இந்தியா ரேடியோ) இந்தி ஆதிக்க ரேடியோவாக இருக்கிறது!

அகில இந்திய ரேடியோவில், இந்தி ஏகாதிபத்தியத்தின் குரல் கேட்கிறது! அதற்கு எதிரொலி கிளம்பாமற் போகாது! ○

...ரு தோநாள்மாலை, ஒரு ஏழெட்டு ...ணி நேரத்திற்குள், மற்றோர் ...டத்தில் அவர் கல் நாட்டு...து 26 லட்சரூபாய் செலவில் ...தாழில்வளர்ச்சிக்கான ஒரு ...ல்லூரி கட்டடத்திற்கு!

...காலையில் அவர் பேசினார் ...பாட சாலைகளுக்கு குருகுலங்...ளுக்கு ஈடாக, பல்கலைக்கழகங்...ள் வரமுடியுமா" என்று!

...மாலையில் அவர் பேச ...அழைக்கப்பட்டது ஒரு பல்க...லக் கழகத்தில், தொழில் கல்...லூரி ஆரம்ப விழாவில்!

...குடிசைகள் போதும், மரத்...டி போதும், ஏடு போதும் ...எழுத்தாணி போதும் என்று ...சான்னவரை அழைத்துப் ...பாய், 26 லட்ச ரூபாயில் கட்ட...த்தின் உருவங்களைக் காண ...த்து, அதில் வைக்கப்போ...கும் விஞ்ஞானக் கருவிகளைக் ...காண்பித்தால், எப்படியிருந்தி...ருக்கும்? அவருக்கு ஒரு வேளை ...ஒன்றும்வறுத்தாமலிருத்திருக்...லாம். இதைப்போல பல ...வகையான நிகழ்ச்சிகளில் ...அவர் கலந்து பழக்கப்பட்டி...ருக்கலாம்! இவைகளில் உள்ள ...முரண்பாட்டைப் பற்றி அவர் ...நினைக்காமல் போயிருக்கலாம்! ...காலையில் அந்த விழா மாலை...யில் இந்த விழா என அவர் ...கவலைப்படாமலிருந்திருக்க...லாம்! குடியரசுத் தலைவருக்கு ...இரண்டு இடத்திலும் வரவேற்...புகளும் பாராட்டுரைகளும் ...கிடைத்திருக்கும். அதில் ...அவர் திருப்தியடைந்து விட்...டிருக்கலாம்!

ஆனால் அந்த இரு செய்தி...களைப் படிப்பவர்களுக்கு இரண்டிலும் உள்ள முரண்பாடு புலப்படாமல் போகாது. குடியரசுத் தலைவரைப்போல, பல மத்திய டில்லி பெரிய மந்திரிகளும் குட்டி மந்திரிகளும் பேசிவருகிறார்கள். ஒரு புறம் "ஆதாரக் கல்வி" பற்றி பேசுகிறார்கள். மறு பக்கம் "தொழில் வளர்ச்சி" பற்றி திட்டம் போடுகிறார்கள். இரண்டையும் பற்றிய தெளிவான கருத்து யாருக்கும் இருப்பதாகத் தெரியவில்லை.

அரசாங்கம் இதை முடிவாகத் தெரிவித்து விட்டால், பல சிக்கல்கள் ஏற்படாது. ஆதாரக் கல்விதான் தேவையானது என்றால், மரத்தடி, கூரைக் கொட்டகை, குருகுலம், பாடசாலை இவைகளுடன் நின்று விடலாம். பல்கலைக் கழகம் ஆய்வுக் கூடங்கள், விஞ்ஞானக் கருவிகள், பல இலட்சங்களில் கட்டடங்கள் தேவைப்படாது.

அரசாங்கம் விஞ்ஞான முறையில் தொழில் வளர்ச்சி செய்ய விரும்புகிறது. அதே சமயம் ஆதாரக் கல்வி என்று பல கோடிக் கணக்கில் பணத்தைச் செலவிடுகிறது. இது கூர்ந்து கவனிப்பவர்களுக்கு பெரிய குழப்பத்தைத் தருவதாக இருக்கிறது. குடியரசுத் தலைவர்களாக இருப்பவர்களால், காலையில் குருகுலத்தைப் பாராட்டி விட்டு, மாலையில் 26 இலட்ச ரூபாய் தொழில் கல்லூரிக் கட்டடத்தை ஆரம்பித்து வைக்க முடிகிறது மற்றவர்களால் அவ்வாறிருக்க முடியாதே! ○

"மன்றம்" அச்சகத்தில் (93, பிராட்வே, சென்னை-1. தமிழ்நாடு) ஆசிரியர், இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. உதவி ஆசிரியர்: இரா. செழியன், எம். ஏ.—(தொலைபேசி எண்: 55697)